350/1942/I

1806

உ

ஓம் தத் சத்.

பரப்பிரஹ்மணே நம:

புலவர்புராண அந்தர்க்கதமான

ஸ்ரீ சோலைய சுவாமிகள் சரித்திராமிருதம்

மூலமும்,

ஸ்ரீலஸ்ரீ ஆத்துமாநந்த சுவாமிகள் மாணுக்கர்

முள்ளூர்

எ. ஜெனமல்லுக் கவுண்டரவர்கள்

இயற்றிய

உரையும்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
26 JAN 1942
MADRAS

ஷை உரையாசிரியரவர்களாலும்,

வீரபாண்டியபுரம்

திரு. கர்ணம். வீ. வீரவாகு பிள்ளை

அவர்களாலும்

திருத்தம்பெற்று,

மதுரை, ஈசன் பிரஸில் பதிப்பிக்கப்பெற்றது.

1941.

காபிரைட்] [விலை அணு 5

பொருளுபகாரப் பத்திரம்.

ஊர்	பெயர்	தொகை	
	மகா-ா-ா-ஸ்ரீ அவர்கள்	ரூ	அ
முள்ளூர்	கர்ணம் S. சுப்பிரமணிய பிள்ளை	10	
,,	உரையாசிரியர் எ. ஜேன மல்லுக்கவுண்டர்	21	
முத்துக் குமார புரம்	தி. இராமசாமி ரெட்டியார்	5	
,,	ஸ்கூல் மானேஜர், T. பெருமாள் தேவர்	10	
ஐயர் பட்டி	அரிய முத்துப்பிள்ளை	2	
வேட நத்தம்	சோ. குமாரசாமிக்கவுண்டர்	3	
,,	சோலைக் கவுண்டர்	2	
,,	அ. சுப்பிரமணிய பிள்ளை	3	
கொல்லம் பரும்பு	வெள்ளையக் கவுண்டர்	2	
,,	ல. நாகமணி நாயக்கர்	1	
வீரபாண்டிய புரம்	கர்ணம் வீ. வீரவாகுபிள்ளை	10	
நமசிவய புரம்	தி. கந்தசாமிக் கவுண்டர்	2	
வ. வெங்கடேசுர புரம்	ஐயாவு ரெட்டியா ரென்றவட ரெட்டியார்	5	
வே. வெங்கடேசுர புரம்	அழகு ரெட்டியார்	1	
அரியநாயகி புரம்	போ. இராமசாமி ரெட்டியார்	1	
சோலைமலையம்பட்டி	கோ. கரியமால் கவுண்டர்	5	
	ஆக வரவு	83	
	இந்நூல் அச்சிடச் செலவு	67	
	படிச் செலவு	16	
	ஆகச் செலவு	83	

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
26 JAN 1942
MADRAS

உ

ஓம் தத் சத்

பரப்பிரஹ்மணே நம

உரைச் சிறப்புக் கவி

பொன்மயபுரம்

திரு. இலக்கணமுத்துக் கவிராயர் அவர்கள்
குமாரர் திரு. சிவப்பிரகாசக் கவிராயர் அவர்கள்
பாடியது.

திங்கண் மேவிய விரிசடைப் பரமனார் சேயி ன்
பொங்கு பேரருள் பூண்டவப் புனிதமா முனியு ஞ்
சங்க மேயமெய்ப் புலவருந் தழைத்தினி திருந் த
பங்க மேயிலா நாடது பாண்டிநன் னாடு (௧)

வெள்ளி மால்வரை யெனமணி விரிதிரைக் கரத்தா ல்
அள்ளி வான்றடங் கொழித்தொரு தமிழணங் கறைந் த
கள்ள மின்மொழி விளக்கிடும் பொருநையாற் கவினா ர்ந்
துள்ள வோர்திரு நெல்லைமா நகர்வ ணுறுமால் (௨)

அம்மாநக ரிடைவைகிய வருமாதவ னொருவ ன்
இம்மாமகி புரிமாதவ மென்னும்படி வந்தோ ன்
கம்மாறணி யிறைவன்கழல் கருதும்மன முடையா ன்
நம்மாசறு தமிழ்வாரி நயந்தேநனி யுண்டோன் (௩)

ஏர்பெறுந் தண்ட பாணி யெனுமுயர் நாமத் தானி ப்
பார்புகழ்ந் திடுநந் தெய்வப் பாவலர் திறங்கள் சாற்று ம்
ஓர்பெரும் புராணந் தன்னை யுஞற்றியிக் குதவி னுன ச்
சீர்பெறு நூலிற் பற்பல் சருக்கங்கள் செறிந்து தோன்றும்

அவற்றினுட் புகழ்சால்சோலை யருந்தவன்சருக்கமொன்றிற்
குவப்புற வெவரு நன்காய்ந் தோருரை யியற்றி னுனு ல்
இவற்பெறு வானவ் வின்றூ ரியற்றுமா தவம்யா தென் றே
புவித்தலைவாழ்வோ ரெல்லாம் புகன்றிட விளங்குமேலோன்

உற்ற வோர்துணை யரன்கழ லேயென வுணர்ந் தே
முற்று மேதுறந் திடும்பெருந் தவத்தரின் முதன் மை
பெற்ற மாதவ னுத்துமா நந்தப்பேர்ப் பெரியோ ன்
பொற்ப தாம்புயந் தலைமிசைச் சூடிய புனிதன் (சு)

மொழித்திறத்தின் முட்டகற்று மிலக்கணமோ டிலக்கியமு முறையே கற்றூன், வழுத்திடுநன் னூறனக்கிங் குரைதீட்டு வதில்வலத்தன் வண்மை யார்பூம், பொழிற்றிறத்தாற் பொலிவுபெறுந் திருமுள்ளூ ருறைபுனிதன், போத மிக்கோன், பழித்திறமில் பல்குணத்தான் செனமல்லுக் கௌடனெனும் பாவ லோனே (எ)

வீரபாண்டியபுரம் கர்ணம்
திரு. வீ. வீரவாகு பிள்ளையவர்கள்
இயற்றிய அறுசீர்க் கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

ஏராரும் பொழில்சூழும் பொதிகைமலைக் குறுமுனியே யிவனு மென்னப், பாராரும் பல்கலைதேர்ந் திடும்பெரி

யோன் றனையடைந்தார் பவநோய் தன்னை, நாராரு நோக்கமதா லொழித்தருளு மாத்துமா நந்த முத்தன், தாராருஞ் சீரடியை யெந்நாளுஞ் சிரமிருத்துந் தகைமைத் தூயோன் (௧)

உலகனைத்தும் புகழ்ந்துசொலு முள்ளூரி லனுப்பர் குலத் துதித்தோ னும்பர், குலதருவை நிகர்வள்ள லெறம லென்பான் செய்தவமே குலவ வந்தோன், நலமிகுந்த வழியொழுகி யாவருமே யின்பினிடை நண்ணி வாழ்வான், சொலுமமிர்த மொழிபகர்வோன் றருக்கமுட னிலக்கண முஞ் சொலித்த நாவான் (௨)

மனமதனைப் பொறிவழியிற் புகுத்தாம லரனடிக்கே மருவச் செய்தோன், தனமாதி யாமூன்றும் பொய்மை யெனத் தேர்ந்துணருந் தன்மை யுள்ளோன், சினமதனைக் கனவிலுங்கண் டறியாதா னடைந்தவர்க்கு நலனே செய் வோன், செனமல்லுப் பெயர்மருவு மோர்புனிதன் புல வர்களிற் சிறப்புற் றோனே (௩)

பொருநைசூழ் பதிநெல்லைக் கங்கைகுலந் தழைக் கவரு புனிதன் வேலன், அருளுலவு வணச்சரப மெனு முருக தாசனருண் மொழியாற் சொன்ன, பெருமைமிகுந் திடுந்தெய்வப் புலவர்களின் புராணமதிற் பிறங்கு சோலைத், தருமகுண சீலனுயர் சருக்கத்திற் குறைபகர்ந்து தந்தான் மாதோ. (௪)

ஐயர்பட்டி திரு. இராம. அரியமுத்துப் பிள்ளையவர்களியற்றிய

பதினான்கு சீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

சீர்பெருகு ஞானநிறை சோலைசு வாமியென் சித்த
னின் சரித நூற்குத், தேனையின் பாலொடு கலந்ததென
வொண்பொருள்கள் செறிபொழிப் புரையு தவினான்,
நீர்பெருகு பொருநையரு கவனிமக டிலகமா நிலவுபுக
ழும்பை நகரில், நித்தபர வத்துவே முத்தியருள் வித்தாகி
நிறையின்ப சொருபி யாகி, ஆர்பெருகு காவிமணி நீறு
புனை யுந்துரிய வாச்சிரமி யாகி யெனையாள், ஆத்துமா
நந்தகுரு மூர்த்திதா ளம்புய மகத்துற வமைக்கு மன்பன்,
ஏர்பெரு கிலக்கிய விலக்கணமொ டத்துவித வின்புதரு
நூலில் வல்லோன், எனதுநண் பன்சென்ன மல்லுநா
மம்புனை யெழிற்கவுட குலதி லகனே . (க)

உ

ஓம் தத் சத்.

பரப்பிரஹ்மணே நம:

புலவர்புராண அந்தர்க்கதமான

ஸ்ரீ சோலைய சுவாமிகள் சரித்திராமிருதம்

மூலமும், உரையும்.

உரைமங்கலம்

விநாயகர்

வணக்கவடிவம்

கொச்சகக்கலிப்பா.

மெய்யன்பருளத்திருந்து வேண்டுவன நல்குமைந்து
கையனுல் வாயினனற் கருணைபொழி முக்கண்ணன்
ஐயனிரு வினைப்பிறவிக் கடல்கடக்க வரும்புணையாஞ்
செய்யநறுங் கஞ்சமலர்த் திருவடிகள் சிரத்தணிவாம்.

உரைமங்கலம்

குரு

வாழ்த்துவடிவம்

கலிவெண்பா.

திங்கட் கொழுந்தணியுந் தேவன் வடவிருக்க த்
தங்க ளொருநால்வர்க் காசானுய்ப்—பொங்கமுட ன்
அஞ்ஞான நீங்க வருளினன்போ லன்பருக்கு ச்

சுஞ்ஞான நல்குஞ் சுககுருவே—எஞ்ஞான்று ம்
பாசப்பகையே பரிந்து மகிழ்ந்துத னை
நேசித்திடுவார்க்கு நேயனே—ஊசலொக்கு ம்
வெம்பு பிறப்பிறப்பு வீய வருண்மழை யை
நம்படியார்க்குப்பொழியும் ஞானவிண்ணே-பம்பரம்போ ல்
ஆடுஞ் சராசரங்கள் யாவுமுள வாகிநின் று
வீடுஞ் செயற்கேது வேயாகிப்—பீடுத ரு
சத்துவ மாதித் தகைமை கடந்தவரு ட்
சித்துருவ மாயிலகுந் தேசிகா—*சித்திரம் போ ல்
விண்ணினிடைத் தோன்றிமறை மின்னினிலையில்லதுவா ய்
மண்ணினிடைத்தோன்றிவிளி வாமுடலின்-உண்மைதெரி த்
தஞ்சு பொறியு மறிவுங் கலங்கிநைய த்
துஞ்சிப் பிறக்குந் துயரொழிக—அஞ்சேலெ ன்
றுதரித்து ஞானுபதேச மளித்தென து
கோதகற்றி யாளவுளங் கொள்ளுதியோ—தீதுபொ வி
பந்த மகன்ற பரிபூ ரணவடி வே
சிந்தை விளக்குஞ் செழுஞ்சுடரே—எந்தா ய்
உயிருக் குயிராகி யூழ்வினைக ணீங்க ச்
செயிருக் கிரந்துரத்துந் தேவே—பயனுதவா க்
காமங் குரோதங் கயமை தருலோப ஞ்
சேம முதவாத தீமோகந்—தோமா ர்
மதமாச் சரிய மனப்பகைக ளாறு ம்
நித்மு முளத்துதியா *நிட்டை—சுதன்மமெனு ங்
கொல்லாமை வாய்மை குலையா வறிவுடை மை
பொல்லாமை நீங்கு பொறையுடைமை—நல்லார்க ள்
வேண்டுமுயர் கல்வியுடன் ஞானம் விளைவிரத ம்
பூண்ட வருளன்பு புனைபுனிதம்—நீண்டபுக ழ்

---

*சித்திரம்—அதிசயம். *நிட்டை—நன்னடை.

எல்லா மிசைந்த விறைவா வுனையணுகி க்
கல்லாக் கயவர் கணம்விலகிப்—பொல்லா த
சென்ம மொழியுந் திறமே கருதாம ற்
கன்மம் பலபுரிந்து காசினியில்—வன்மனனு ய்
உற்றார் மனைவி யுடன்பிறந்தா ரொண்சிறுவ ர்
பெற்றார்பா லிவ்வுடற்பாற் பேராசை- சற்றேனு ம்
ஓவா தகந்தை மமதை யுறுவேற்கு ம்
ஆவா கருணை யருளுதியோ-பூவுலகி ல்
தெய்வத் திருமறையி னீறு தெளிந்தாய்ந் த
சைவக் குரவா தமிழ்வேந்தே—ஐய ம்
விவரீ தவிருள் விளையாம லென்று ந்
தவபானு வாயுயிருட் டங்குஞ்—சிவவடி வே
இந்திராதி யோரின் பிகழ்விக்கு மின்சுக மே
சந்திராதி யோரொளிக்குந் தானொளியே—சந்ததமு ம்
போற்றி யடியார் புகழ்ந்தஞ் சலித்துய வே
ஊற்றமிகு காவி யுடைபுனைந்து—தேற்றமுட ன்
அக்கு மணிவடமு மார்ந்திலங்கு வெண்ணீறு ந்
தக்க தருமந் தழைத்திடவே—மிக்கணிந் து
வானும் புவியும் வணங்குந் தவமுனி யே
ஈன மதங்க ளிகந்தோனே—தேனுல வு
கொன்றை யறுகு குடில மிலைந்தபர ன்
வென்றி யடியார் விளங்குகழல்—ஒன்றுபுன ல்
ஆடுங் கிருமி யடையும் பலனையின்ப ந்
தேடுகின்ற வேட்கையினர் தீவினைகள்—ஓட வே
சென்று படியுந் திரிபதகை யாதித ரா
என்றுமறை கூறுதலா லேழையேன்—நின்கம ல
பாதோ தகமாடப் பந்தமெனை விட்டோட க்
கோதிலின்ப வீடினிது கூடவே—போதவிழு ந்

தும்பை மதிச்சடையான் றொண்டர் புடைசூ ழ
அம்பை நகரி லமர்வோனே—நம்பர னே
ஆத்துமா நந்த குருவே அடைக்கலங்க ண்
பார்த்தருள்க நீயே பரிந்து.

பாயிரம் முற்றிற்று.

நூல்.

மலய மால்வரைச் சார விற்குலாம் வளமை
தோயுநா டதனில் வைகிவா ழ்
அலகின் மாந்தர்தஞ் சாதி பேதத்து டனுப்ப
ரென்றபே ராளர் தம்மனை க்
குலவு பாலனு வந்த புண்ணியன் குடிவ
ளத்தினிற் குறைவில் பேறுளா ன்
நிலவு கல்வியுந் தவமு நல்குநன் னேய
னுக்கொரா ளெனநி லாவினன் (க)

இதன்பதப்பொருள்:— மால் - பெருமைபொருந்திய, மலய வரைச்சாரலில்-பொதிகைமலையின் பக்கத்தில், குலாம்-பொருந்தி யுள்ளதும், வளமைதோயும்-(சகல) செல்வப்பொலிவையுஞ் சார்ந் துள்ளதும் (ஆகிய), நாடு அதனில்-(பாண்டிய) தேசத்தில், வைகி வாழ்-தங்கி வாழுகின்ற, அலகில்-எண்ணில்லாத, மாந்தர்தம்-மனிதர்களது, சாதிபேதத்துடு-குலவகுப்பினுள்ளே, அனுப்பர் என்ற-அனுப்ப(க்கவுண்ட)ரென்று (ஓர்குலமாகச்) சொல்லப்படு கின்ற, பேராளர்தம்மனை-கீர்த்தியுடையோரது ஒரு வீட்டின்கண், குலவுபாலனுவந்தபுண்ணியன்-(யாவராலுங்)கொண்டாடத்தகுந்த புண்ணியமேவடிவாகிய பாலகராயவதரித்தருளியவர்; குடிவளத்தி

னில்-(பூருவபுண்ணியத்தாற்கிடைத்த) குடிச்செல்வத்திலும், குறை வில்பேறுஉளான்-(யாதொரு) குறைவுமில்லாத செல்வமுடைய வர், நிலவுகல்வியும்-விளங்காநின்ற நூற்கல்வியையும், தவமும்-தம்முயிர்க்கு வருந்துன்பங்களைப் பொறுத்தலும் பிறவுயிர்க்குத் துன்பஞ்செய்யாமையுமாகிய தவத்தையும், நல்கும்-கொடுக்கின்ற, நல்நேயனுக்கு - ஞானசாரியருக்கு, ஒருஆள்என நிலாவினன்-ஒப்பற்றதொண்டரென்றுசொல்லும்படி விளங்கினவர். என்றவாறு.

பொழிப்புரை:—பெருமை பொருந்திய பொதிகைமலையின் பக்கத்திற் பொருந்தியுள்ளதும் சகல செல்வப் பொலிவையுஞ் சார்ந்துள்ளதுமாகிய பாண்டிய தேசத்தில் தங்கிவாழுகின்ற எண்ணில்லாத மனிதர்களது குலவகுப்பினுள்ளே அனுப்பக்கவுண்டரென்று ஓர் குலமாகச் சொல்லப்படுகின்ற கீர்த்தியுடையோரது ஒரு வீட்டின்கண் யாவராலுங் கொண்டாடத் தகுந்த புண்ணியமே வடிவாகிய பாலகராய் அவதரித்தருளியவர். பூருவ புண்ணியத்தாற் கிடைத்த குடிச்செல்வத்திலும் யாதொரு குறைவுமில்லாத செல்வமுடையவர். விளங்காநின்ற நூற்கல்வியையும் தம்முயிர்க்கு வருந்துன்பங்களைப் பொறுத்தலும் பிறவுயிர்க்குத் துன்பஞ் செய்யாமையு மாகிய தவத்தையுங் கொடுக்கின்ற ஞானசாரியருக்கு ஒப்பற்ற தொண்டரென்று சொல்லும்படி விளங்கினவர். என்றவாறு.

குலாவும் என்பது குலாம் என விகாரமாய் நின்றது.

இவர் அவதரித்தருளிய கிராமம் யாதெனில் பாண்டிவள நாட்டில் கீழ்சமுத்திரக் கரைக்குச் சமீபமாயுள்ளதும் கல்லாற்றின் தீரத்திலிருப்பதுமாகிய * வேடநத்தங் கிராமமென்று அறிக. இங்ஙனம் ஆன்றோர் கூறுவர். (க)

---

* வேடநத்தம் என்னும் ஓர்கிராமத்திற்பிறந்தவர் என்பதை ஸ்ரீசோலையசுவாமிகள் ஜீவிய விருத்தாந்தமென்னும் வசன வடிவமான நூலிற் கூறியிருத்தலுங் காண்க.

சோலை யப்பெயர்ச் சூடு மன்னவற் றொண்ட
 னுமெனக் கொண்ட தேசிக ன்
பாலை யொக்கவே முடிவெ ளுத்தபின் பருவ
 மாதொருத் தியைம ணந்தன ன்
சேலை யன்னகண் ணவடன் வாலிபந் தீரு
 முன்னுடற் றிரைம லிந்ததா ன்
ஓலை பற்றுகைத் தூதர் நேர்வரென் றுன்னி
 யோர்சொலன் னவனொ டோதுவான் (உ)

இ-ள்:—சோலையப்பெயர் சூடும் அன்னவன் - (தமது தாய் தந்தை முதலியபெரியோர்களாலிடப்பட்ட) சோலை என்னுந் திருநாமம் புனைந்த மேலேசொல்லப்பட்டவரை, தொண்டனுமெனக் கொண்ட தேசிகன் - (பலசீடருள்ளும் இவரேசற்) சீடராகுமென்று தமது திருவுளத்திலெண்ணிய ஸ்ரீ குருமூர்த்தியானவர், பாலையொக்க-பாலினிறம்போல, முடிவெளுத்தபின் - (தலையின் கண்ணுள்ள) உரோமங்களெல்லாம் நரைத்த (கிழப்) பருவத்தில், பருவமாது ஒருத்தியை-(மங்கை)ப் பருவமடைந்த ஒருபெண்ணை, மணந்தனன்-திருமணஞ்செய்தருளினர், சேலைஅன்ன-கயல்மீனையொத்த, கண்ணவள்தன் வாலிபந்தீருமுன்-கண்ணையுடைய அவளது யௌவனபருவம் நீங்குமுன்பே, உடல்திரை மலிந்ததான்-(தமது) திருமேனியில் (நரையுந்) திரையும் (மூப்பும்) அதிகப்பட்ட ஸ்ரீகுருமூர்த்தியானவர், ஓலைகைபற்றுதூதர்-(வாழ்நாளின்முடிவையறிவிக்கும்) ஓலையைக்கையிற்கொள்ளும் யமதூதர், நேர்வர்என்று உன்னி-(உயிரைக்கவர்ந்து போவதற்கு இன்னநாளில்) வருவரென்றாராய்ந்து பார்த்து, ஓர் சொல்-ஒரு வசனத்தை, அன்னவனொடு-மேற்கூறிய ஸ்ரீசோலையசுவாமிகளுடன், ஓதுவான்-உரைப்பாராயினர். எ-று.

பொ—ரை:—தமது தாய் தந்தை முதலிய பெரியோர்களா விடப்பட்ட சோலை என்னுந்திருநாமம் புனைந்த மேலேசொல்லப் பட்டவரைப் பல சீடருள்ளும் இவரே சற்சீட ராகுமென்று தமது திருவுளத்தி லெண்ணிய ஸ்ரீ குருமூர்த்தியானவர் பாலினிறம் போலத் தலையின்கண்ணுள்ள உரோமங்க ளெல்லாம் நரைத்த (கிழப்) பருவத்தில் மங்கைப் பருவமடைந்த ஒருபெண்ணைத் திருமணஞ் செய்தருளினூர். கயல்மீனையொத்த கண்ணையுடைய அவளது யௌவன பருவம் நீங்கு முன்பே தமது திருமேனியில் நரையுந்திரையும் மூப்பும் அதிகப்பட்ட ஸ்ரீ குருமூர்த்தியானவர் வாழ்நாளின் முடிவை யறிவிக்கும் ஓலையைக் கையிற் கொள்ளும் யமதூதர் உயிரைக் கவர்ந்து போவதற்கு இன்னநாளில் வருவ ரென்றாராய்ந்து பார்த்து ஒருவசனத்தை மேற்கூறிய ஸ்ரீசோலைய சுவாமிகளுடன் உரைப்பாராயினர். எ—று.

ஏ—அசைநிலை. (உ)

இன்ன நாளிலியான் விண்ணி லேகுவே னெனது
பள்ளிக்கூ டத்தை நீவகி த்

துன்ன தன்னையோ டிவளை யும்புரந் தொழுக
வேண்டுமென் றோதி யேகினு ன்

அன்ன சொற்புரந் திடலு மூரிலுற் றார்கள்
சொன்னசொல் லறைய லாவ தோ

தன்ன தன்னையப் பனுமு டன்பிறந் தாரு
மச்சொலைத் தழுவி னரரோ. (ங)

இ—ள்:— இன்னநாளில் - இன்னநக்ஷத்திரத்தில், யான்விண் ணில் ஏகுவேன்-நான் பரமபதம் அடைவேன், எனது பள்ளிக் கூடத்தை - (யான் நடத்திவந்த) என்னுடைய பாடசாலையை, நீ வகித்து-நீநடத்தி. உன்னது அன்னையோடு-உன்னுடைய மாதா வுடன், இவளையும்-(எனது தருமபத்தினியாகிய) இவளையும்,

புரந்து ஒழுகவேண்டுமென்று-பாதுகாத்துவருதல்வேண்டுமென்று, ஓதி-(ஸ்ரீ சோலையசுவாமிகளிடம்) ஆக்ஞாபித்து, எகினன்-பரம பதமடைந்தனர், அன்னசொல்புரந்திடலும்-ஆசிரியர் ஆக்ஞாபித்த முறையே அவரது பள்ளிக்கூடத்தையும் நடத்தி அவரது தரும பத்தினியையும் பாதுகாத்து வந்தனர். அவ்வாறு பாதுகாத்து வருங்காலத்தில், ஊரில் உற்ருர்கள்-அவ்வூரின்கண்ணுள்ளவுற வினர், சொன்னசொல்-(அதுகாரணமாக அவர்மீது கற்பனையாகச்) சொல்லியபழிச் சொற்களை, அறையலாவதோ-(நாவினுல்) சொல்லவுந்தகுவதோ (தகாது என்றபடி), தன்னது அன்னை அப்பனும்-ஸ்ரீ சோலையசுவாமிகளுடைய மாதா பிதாக்களும், உடன் பிறந்தாரும்-(அவர்) சகோதரரும், அச்சொலை-(உறவினர் கற்பனையாகச் சொல்லிய) அப்பழிச்சொற்களை, தழுவினர்-அநுசரித்துப் பழிக்கத்துணிந்தனர். எ—று.

போ—ரை:—இன்ன நக்ஷத்திரத்தில் நான் பரமபதம் அடைவேன் யான் நடத்திவந்த என்னுடைய பாடசாலையை நீ நடத்தி உன்னுடைய மாதாவுடன் எனது தருமபத்தினி யாகிய இவளையும் பாதுகாத்து வருதல் வேண்டுமென்று ஸ்ரீசோலைய சுவாமிகளிடம் ஆக்ஞாபித்துப் பரமபதம் அடைந்தனர். ஆசிரியர் ஆக்ஞாபித்த முறையே அவரது பள்ளிக்கூடத்தையும் நடத்தி அவரது தரும பத்தினியையும் பாதுகாத்து வந்தனர் அவ்வாறு பாதுகாத்து வருங்காலத்தில் அவ்வூரின்கண்ணுள்ள வுறவினர் அதுகாரணமாக அவர்மீது கற்பனையாகச் சொல்லிய பழிச்சொற்களை நாவினுல் சொல்லவுந் தகுவதோ (தகாதுஎன்றபடி) ஸ்ரீசோலைய சுவாமிகளுடைய மாதா பிதாக்களும் அவர் சகோதரரும் உறவினர் கற்பனையாகச் சொல்லிய அப்பழிச்சொற்களை அநுசரித்துப் பழிக்கத் துணிந்தனர். எ-று.

அரோ அசைநிலை-சொலைஎன்பது இடைக்குறை (ரு)

கல்வி நல்கினன் பன்னி யென்றுளிற் கருதி
லாவிதென் காரணங்கொ லோ
நல்வி னைத்தொடர்ச் சியினர் போலுநீ
நரக வாதனைத் தொழில்செய் கிற்பதே ன்
வல்வி ரைந்துகை விடுதி யென்றுரே வாய்ப
டச்சொனுர் மனமெரிந்துபோ ய்
அல்வி டங்குடித் தவனை நம்புகென் றவளொ
டோதிமெல் லடிவ ணங்கியே (ச)

இ—ள்:—கல்வி நல்கினன் பன்னியென்று - கல்விகற்றுக் கொடுத்த குருவினுடையமனைவியென்று, உளில் கருதிலா இது-(உமது) மனத்திலுணராதஇம்மயக்கபுத்தியானது, என் காரணங்கொலோ - எதன்பொருட்டுண்டாகியதோ (அதனையாங்களறிந்திலோம்), நல்வினைத்தொடர்ச்சியினர் போலு நீ- (புண்ணியத்தைத் தருகின்ற) சுபகருமத்தைச் செய்பவர்போலக் (காணப்படுகின்ற) நீர், நரகவாதனைத்தொழில் செய்கிற்பதேன்- நரகத்துன் பத்திற்குஏதுவாகிய பாவகருமத்தைச் செய்வது எதன்பொருட்டு (அதனையும் யாங்களறிந்திலோம்) ,வல்விரைந்து-(ஆதலால் இவற்றை) மிகவிரைந்து, கை விடுதியென்று - விட்டொழிப்பீரென்று, ஒரேவாய்படச்சொனுர்-(அவ்வுற்றுர் முதலியோர் யாவரும்) ஒருவர் கூறியதுபோலவே கூறினுர், மனமெரிந்து - (இவற்றைக்கேட்ட ஸ்ரீசோலையசுவாமிகள்) மனங்கொதித்து, அவளொடுபோய் - அக் குருபத்தினியிடஞ் சென்று, மெல்லடிவணங்கி - மென்மையான பாதங்களைத்தொழுது, அல்விடம் குடித்தவனை - கரியவிஷத்தையுண்ட சிவபெருமானையே, நம்புகஎன்று-நீ நம்பக்கடவாய் (என்னை நம்பவேண்டாம்) என்று, ஓதி- .(தம்மீதுகற்பனையாகச் சொல்லப்படும் பழிச்சொல்லையும்) உரைத்து. எ—று.

பொ—ரை:—கல்விகற்றுக்கொடுத்த குருவினுடைய மனைவி யென்று உமது மனத்திலுணராத இம்மயக்க புத்தியானது எதன் பொருட்டு உண்டாகியதோ அதனை யாங்க ளறிந்திலோம் புண்ணியத்தைத் தருகின்ற சுபகருமத்தைச் செய்பவர்போலக் காணப்படுகின்ற நீர் நரகத்துன்பத்திற்கு ஏதுவாகிய பாவ கருமத்தைச் செய்வது எதன்பொருட்டு அதனையும் யாங்க ளறிந்திலோம் ஆதலால் இவற்றை மிக விரைந்து விட்டொழிப்பீரென்று அவ்வுற்ருர் முதலியோர் யாவரும் ஒருவர் கூறியது போலவே கூறினர். இவற்றைக் கேட்ட ஸ்ரீசோலையசுவாமிகள் மனங் கொதித்து அக்குருபத்தினியிடஞ் சென்று மென்மையான பாதங்களைத் தொழுது கரிய விஷத்தையுண்ட சிவபெருமானையே நீ நம்பக் கடவாய் என்னை நம்ப வேண்டாமென்று தம்மீது கற்பனையாகச் சொல்லப்படும் அபவாதத்தையுமுரைத்து. எ—று.

இது குளகம்

உளில் என்பதும் சொனர் என்பதும் இடைக்குறைகள் ஏ-அசைநிலை (ச)

உன்னை யென்னனைக் கெண்ம டங்குமே லுபச
ரிக்கவே யுன்னி னேனத ற்
கென்ன பாவமோ தடைசெய் திட்டதியா னினியிவ்
வூரில்வை கேனெ னச்சொலி த்
தன்னை யாதியோர் தம்மதெண்ணமே தவறென்
றுன்னிடத் தவசி யாகி யே
பொன்னை மாதரைப் புவியை யெள்ளுமெய்ப் போத
மெய்தியே போயி னனரோ (ரு)

இ—ள்:—என் அனைக்கு-எனது மாதாவைப்பார்க்கினும், எண்மடங்குமேல்-எட்டுப்பங்கு அதிகமாய், உன்னை-(எனது குருபத்தினியாகிய) வுனக்கு, உபசரிக்க உன்னினேன்-வழிபாடுகளைச்

செய்யவேண்டுமென நிச்சயித்திருந்தேன், அதற்கு, என்னை பாவமோ-யாது தீவினையோ, தடைசெய்திட்டது - (நம்மிருவருக்கும் நடுவில் நின்று) தடுத்துவிட்டது, யான்-(ஆகையால்) நான், இனி-இனிமேல், இவ்வூரில்-(குருவிஞணைகடந்ததுரோகி என்ற பெரும்பழியை என்மீது சுமத்திய) இந்தவூரில், வைகேன்எனச் சொலி-தங்கிவாழேனென்றுசொல்லி, தன்னை ஆதியோர் தம்மது எண்ணம்-(தம்முடைய) தாய் முதலியோர் (ஒவ்வொருவருங் கொண்டுள்ள) தங்கள் தங்கள் (விபரீத) நினைப்பை, தவறு என்று உன்னிட-(தாங்களே) குற்றமென்றுணரும்படிக்கு, தவசி ஆகி-(ஸ்ரீசோலையசுவாமிகள்) தவவேடம் பூண்டவராய், பொன்னை மாதரைபுவியை-பொன்னுசை பெண்ணுசை மண்ணுசையென்னும் மூவித ஆசைகளையும், எள்ளும்-(தோஷதிருஷ்டிவாயிலாய்த்துச்சமென்று) இகழச்செய்யும், மெய்ப்போதம் எய்தி-தத்துவஞானத்தையடைந்து, போயினன்-(அவ்வூரைவிட்டு) அகன்முர்.

பொ—ரை:—எனது மாதாவைப் பார்க்கினும் எட்டுப்பங்கு அதிகமாய் எனது குருபத்தினியாகிய வுனக்கு வழிபாடுகளைச் செய்யவேண்டுமென நிச்சயித்திருந்தேன் அதற்கு யாது தீவினையோ நம்மிருவருக்கும் நடுவில் நின்று தடுத்துவிட்டது ஆகையால் நான் இனிமேல் குருவிஞணை கடந்த துரோகியென்ற பெரும்பழியை என்மீது சுமத்திய இந்தவூரில் தங்கி வாழேனென்று சொல்லித் தம்முடைய தாய் முதலியோர் ஒவ்வொருவருங்கொண்டுள்ள தங்கள் தங்கள் விபரீத நினைப்பைத் தாங்களே குற்றமென் றுணரும்படிக்கு ஸ்ரீ சோலையசுவாமிகள் தவவேடம் பூண்டவராய்ப் பொன்னுசை பெண்ணுசை மண்ணுசை யென்னும் மூவித ஆசைகளையும் தோஷதிருஷ்டிவாயிலாய்த்துச்சமென் றிகழச்செய்யும் மெய்ஞ்ஞானத்தை அடைந்து அவ்வூரை விட்டகன்முர். ஏ—று.

ஏ—நான்கும் அசைநிலைகள். எள்ளும் என்பது பிறவினைப் பொருளில் வந்தது. அனைக்கு என்பதும் சொவி

என்பதும் இடைக்குறைகள். உன்னை என்பது வேற்றுமை மயக்கம். (ரு)

போன மாதவன் பலபலூரினும் புக்கி
ரந்துணும் பொருவில் தீரமு ற்
றீன மின்றியே பகலி ராவுமோ ரெண்ண
மேகுறிக் கொடுமு யன்றன ன்
தேன ளாவுசொற் குரவ னுதுபத் தினியை
யங்குளார் தெண்ட னிட்டு நி ன்
மான மோர்ந்தனஞ் சினமு றேலெனு வலிதி
யன்றயா வையும் வழங்கினர் (சு)

இ—ள்:—போனமாதவன்-(தவவேடம் பூண்டு ஊரைவிட்டு) அகன்ற பெருந்தவத்தையுடைய ஸ்ரீ சோலையசுவாமிகள், பலபல் ஊரினும்புக்கு-பற்பலவூர்களிலுஞ்சென்று, இரந்து உணும் பொருவில் தீரமுற்று-பிச்சையேற்றுண்ணுதலே (துறவிகட்குச் சிறந்த தருமமென்று அறியும்) ஒப்பற்ற அறிவுடையராயும், ஈனமின்றி-(எவ்விதக்) குறைவுமில்லாதவராயும்(திருப்தியுடையவராயுமென்ற படி), பகல் இராவும்-அகோராத்திரம், ஓர் எண்ணமே-(சிவத்தியான மாகிய) ஒரு நினைப்பையே, குறிக்கொடு-இலக்ஷியமாகக்கொண்டு, முயன்றனன்-அப்பியசித்துவந்தனர், அங்குளார்-அவ்வூரிலுள்ளார் (அனைவரும்), தேன் அளாவுசொல்-தேன்போலுமினிமை கலந்த சொல்லையுடைய, குரவனது பத்தினியை-குருவினுடைய மனைவியை, தெண்டனிட்டு-வணங்கி, நின்மானம் ஓர்ந்தனம்-(எங்களன்னையே) உனது கற்பின் பெருமையை (இப்போதுதான்) அறிந்தோம், சினமுறேல் எனு-(யாங்கள் அறியாமையாற்கூறிய அபவாதத்தை (பழிச்சொல்லை) ஓர் காரணமாகக்கொண்டு எங்கள்மீது) கோபங்கொள்ள வேண்டாமென்று சொல்லி, இயன்றயாவையும்-(அக்குருபத்தினியின்)தகுதிக்கு வேண்டுவனவனைத்தையும்,வலிது

வழங்கினர்-(ஒவ்வொருவருந் தம்மிடத்துள்ள பொருள்களைக் கொடுக்கவேண்டியது அவசியமெனத்) துணிந்து (தாமாகவே) கொடுத்தனர். எ—று.

போ—ரை:—தவவேடம் பூண்டு ஊரை விட்டகன்ற பெருந் தவத்தை யுடைய ஸ்ரீசோலைய சுவாமிகள் பற்பல வூர்களிலுஞ் சென்று பிச்சையேற் றுண்ணுதலே துறவிகட்குச் சிறந்த தரும மென்று அறியும் ஒப்பற்ற அறிவுடையராயும் எவ்விதக் குறைவு மில்லாதவராயும் (திருப்தியுடையவராயுமென்றபடி) பகலு மிரவும் சிவத்தியான மாகிய ஒரு நினைப்பையே இலக்ஷியமாகக் கொண்டு அப்பியசித்து வந்தனர் அவ்வூரிலுள்ளா ரனைவரும் தேன்போலு மினிமை கலந்த சொல்லையுடைய குருவினுடைய மனைவியை வணங்கி எங்களன்னையே உனது கற்பின் பெருமையை இப் போதுதா னறிந்தோம் யாங்களறியாமையாற் கூறிய பழிச் சொல்லை ஓர் காரணமாகக் கொண்டு எங்கள்மீது கோபங்கொள்ள வேண்டாமென்று சொல்லி அக்குருபத்தினியின் தகுதிக்கு வேண்டுவன வனைத்தையும் ஒவ்வொருவருந் தம்மிடத்துள்ள பொருள்களைக் கொடுக்க வேண்டியது அவசியமெனத் துணிந்து தாமாகவே கொடுத்தனர். எ—று.

ஏ-அசைநிலை

உ ணும் என்பதும் பலூர் என்பதும் இடைக்குறைகள். (சூ)

அவனை யோர்தினம் பொருநை மாநதிக் கருகி
லுற்றநெல் லையிலொ ராண்ட கை
குவல யம்புகழ் வடம லைப்பெயர்க் கொற்ற
வன்பசுங் குவளை மாலையா ன்
சிவனெ னக்குறித் தடிவ ணங்கியிச் செல்வத்
தோடருட் செல்வ மும்பெற ற்
குவகை யாலொர்சொற் சொல்லெ ளுவிரந் தோத
விற்செபித் துறுதி யெய்தினன் (எ)

இ—ள்:—மாபொருநை நதிக்கு அருகில் உற்ற-மகத்துவம் பொருந்தியதாமிரபர்ணி நதி தீரத்திலிருக்கின்ற, நெல்லையில் ஓர் ஆண்டகை-திருநெல்வேலியென்னும் நகரத்தின்கண் வசித்து வந்த ஒப்பற்ற ஆண்மைக்குணத்தினையுடையவனும், பசுங்குவளை மாலையான்-பசியகுவளை மலர்மாலையை அணிந்தவனும் (ஆகிய), குவலயம்புகழ்-எவ்வுலகத்தாராலுந் துதிக்கப்படுகின்ற, வடமலைப் பெயர்க்கொற்றவன் - வடமலையப்ப பிள்ளையனென்னுந் திருநாம முடைய ஓரரசன், ஓர்தினம்-ஒருநாள், அவனை - அந்தஸ்ரீசோலைய சுவாமிகளை,சிவனெனக்குறித்து-தக்ஷிணாமூர்த்தியேயெனமதித்து, அடிவணங்கி- (அவருடைய) திருவடிகளை (விதிப்படிபத்திரபுஷ்பாதிகளாலருச்சித்துத்) தொழுது, இச்செல்வத்தோடு- (சுவாமி இக்காலத்தில் யான் அநுபவிக்கின்ற) இப்பொருட் செல்வத்துடனே, அருட்செல்வமும் - தத்துவஞானச் செல்வத்தையும், பெறற்கு-(யான்) அடைவதற்கு, உவகையால்-மனமகிழ்ச்சியோடு, ஓர்சொல்-ஒப்பற்றமஹாவாக்கியத்தை, சொல் என இரந்து- (தமது திருவாக்கால்) உபதேசிக்க வேண்டுமென வேண்டிக் கேட்க, ஓதலின்- (கேட்டவண்ணமே மஹாவாக்கியத்தை) உபதேசஞ்செய்தால், செபித்து-(தான் சிரவணஞ் செய்த அம்மஹா வாக்கியார்த்தத்தை) மனன நிதித்தியாசனஞ்செய்து, உறுதிஎய்தினன்- (இச் * சிரவணமனனநிதித்தியாசனங்களால்) திட அபரோக்ஷஞானத்தையுமடைந்தனன் எ—று.

பொ—ரை:—மகத்துவம் பொருந்திய தாமிரபர்ணி நதிதீரத்திலிருக்கின்ற திருநெல்வேலி என்னும் நகரத்தின்கண் வசித்து வந்த ஒப்பற்ற ஆண்மைக் குணத்தினையுடையவனும் பசிய குவளை மலர் மாலையை அணிந்தவனுமாகிய எவ்வுலகத்தாராலுந் துதிக்கப்படுகின்ற வடமலையப்ப பிள்ளையன் என்னும் திருநாமமுடைய

---

* சிரவணமனன நிதித்தியாசனம் - கேட்டல், சிந்தித்தல், தெளிதல்.

ஓரரசன் ஒருநாள் அந்த ஸ்ரீசோலையசுவாமிகளைத் தக்ஷிண மூர்த்தியேயெனமதித்து அவருடைய திருவடிகளை விதிப்படி பத்திர புஷ்பாதிகளா லருச்சித்துத் தொழுது சுவாமி இக்காலத்தில் யான் அநுபவிக்கின்ற இப்பொருட் செல்வத்துடனே தத்துவ ஞானச்செல்வத்தையும் யானடைவதற்கு மன மகிழ்ச்சியோடு ஒப்பற்ற மஹாவாக்கியத்தைத் தமது திருவாக்காலுபதேசிக்கவேண்டுமென வேண்டிக் கேட்க கேட்டவண்ணமே மஹாவாக்கியத்தையுபதேசஞ் செய்தலால் தான் சிரவணஞ்செய்த அம்மஹா வாக்கியார்த்தத்தை மனன நிதித்தியாசனஞ் செய்து இச்சிரவண மனன நிதித்தியாசனங்களால் திட அபரோக்ஷஞானத்தையு மடைந்தனன். எ—று.

இரந்து என்பது செயவெ னெச்சத்திரிபு (எ)

அந்த மன்னனுற் செந்தின் மூர்த்திகா ராழி
விட்டுமீண் டதுவு மாங்கணே ர்
வெந்த கைப்பொலா வைண வன்பல்பா விண்ட
நாள்கொடை மிகவ ழுங்கலு ங்
கந்த வார்குழற் கவுரி நெல்லையிற் கனவி
ரண்டொர்காற் காட்டி யாண்டது ம்
இந்த வாறியன் றிட்டகாதையா யிரமு
மீண்டியம் பிடவொ ணாதவே (அ)

இ—ள்:—செந்தில்மூர்த்தி-(திருடராற்கவரப்பட்டுச் சமுத்திர ஜலத்தினுள்ளே மறைந்து நின்ற) திருச்செந்தூர்க்கிறைவனாகிய முருகப்பெருமானது உற்சவவிக்கிரகம், அந்த மன்னால்-அவ்வடமலையப்பபிள்ளையனென்னுமரசனால், காராழிவிட்டு - கரியகடலைவிட்டு, மீண்டதுவும்-மீளஎழுந்தருளி (ஆலயத்துக்கு) வந்ததும், ஆங்கண் - அத்திருச்செந்தூரில், வெந்தகை ஓர் பொலாவைணவன்-கொடிய குணத்தையுடைய ஒரு வீரவைஷ்ணவப் பிராம

ணன், பல்பாவிண்டநாள்-(முருகப்பெருமான்மீது) பற்பல தமிழ்ப் பாடல்களைப் பாடியகாலத்து, மிககொடைவழங்கலும்-(அவ்வரசன் அவனுக்குத் திரவியம் ஆபரணம் சிவிகை முதவியவைகளை) அதிகமாகப் பரிசு கொடுத்தலும், கந்தவார்குழல்கௌரி-இயற்கை) மணமமைந்த நீண்ட கூந்தலையுடைய உமாதேவி (காந்திமதியம்மை), நெல்லையில்-திருநெல்வேலி என்னும் நகரில், இரண்டொர்கால்-இரண்டொருமுறை, கனவுகாட்டியாண்டதும்-சொப்பனங்காண்பித்து (அந்தஅரசனை) ஆட்கொண்டதும்(ஆகிய), இந்தவாறு-இந்தப் பிரகாரமாக, இயன்றிட்ட-(தெய்வீகத்தன்மை) பொருந்தியுள்ள, காதை ஆயிரமும்-(அவ்வரசனுக்குரிய) ஆயிரஞ் சரித்திரங்களும், ஈண்டு - இந்நூலில், இயம்பிட ஒணுத - (விரியுமென்றஞ்சிச்) சொல்லக்கூடாதனவாயின. எ—று.

பொ—ரை:—திருடராற் கவரப்பட்டுச் சமுத்திர ஜலத்தினுள்ளே மறைந்து நின்ற திருச்செந்தூர்க்கிறைவனுகிய முருகப்பெருமானது உற்சவ விக்கிரகம் அவ்வடமலையப்ப பிள்ளையனென்னும் அரசனுற் கரிய கடலை விட்டுமீள எழுந்தருளி ஆலயத்துக்கு வந்ததும் அத்திருச்செந்தூரில் கொடிய குணத்தையுடைய ஒரு வீரவைஷ்ணவப் பிராமணன் முருகப்பெருமான்மீது பற்பல தமிழ்ப் பாடல்களைப் பாடிய காலத்து அவ்வரசன் அவனுக்குத் திரவியம் ஆபரணம் சிவிகை முதலியவைகளை அதிகமாகப் பரிசு கொடுத்தலும் இயற்கை மணமமைந்த நீண்ட கூந்தலையுடைய உமாதேவி (காந்தியம்மை) திருநெல்வேலி யென்னும்நகரில் இரண்டொரு முறை சொப்பனங் காண்பித்து அந்தஅரசனை ஆட்கொண்டது மாகிய இந்தப் பிரகாரமாகத் தெய்வீகத் தன்மை பொருந்தியுள்ள அவ்வரசனுக்குரிய ஆயிரஞ் சரித்திரங்களும் இந்நூலில் விரியுமென்று அஞ்சிச் சொல்லக் கூடாதனவாயின. எ—று.

ஏ. அசைநிலை பொலா என்பதும் ஒணுத் என்பதும் இடைக்குறைகள்.

திருநெல்வேலி என்னும் நகரத்தின்கண் வசித்து வந்தவனும், கார்காத்தார் குலத்தி லுதித்தவனும், குவளை மலர் மாலையை அணிந்தவனுமாகிய வடமலையப்ப பிள்ளைய னென்னும் அரசன் பாண்டிவளநாட்டை அரசு புரிந்த காலத்தில், ஒருநாளிரவு திருச்செந்தூரில் திருக்கோவில் கொண்டருளிய முருகப்பெருமானது உற்சவ மூர்த்த மாகிய விக்கிரகத்தைச் சில திருடர் அபகரிக்க வேண்டு மென்னு மெண்ணங்கொண்டு ஆலயத்தினுள்ளே புகுந்து அவ்விக்கிரகத்தை எடுத்துக் கப்பலிலேற்றிக் கடல் மார்க்க மாகத் தங்களூருக்குச் செல்ல நினைத்தார்கள். அப்போது எமது கடவுளாகிய முருகப்பெருமானது கிருபையினால் மழையுங் காற்றும் புசலும் அங்கு வரக்கண்டு அத்திருடர் மனக்கலக்க மடைந்து இந்தத் தெய்வ விக்கிரகத்தை நாம் அபகரித்ததின் காரணமாக ஆபத்து நேர்ந்தது. இந்த ஆபத்திலிருந்து தப்பி உயிர் பிழைக்க வேண்டுமென்னுங் கருத்துடையவராய் விக்கிரகத்தை எடுத்துக் கடல் நீரில் ஆழ்த்திவிட்டுக் கப்பலோடு கடல் மார்க்கமாகத் தங்க ளூருக்கு வெகு விரைவில் திரும்பினார்கள். விடிந்தபின் திரிசுதந்தரர் முதலிய அனைவரும் ஆலயத்தினுள் சுவாமி யைக் காணாமல் தாயிழந்த குழவியைப்போல் அலறி வருந்தினார்கள். இதனை யறிந்த வடமலையப்ப பிள்ளையன் வேறு விக்கிரகஞ் செய்து அங்குப் பிரதிட்டை செய்ய வேண்டுமென நினைத்தான். அவன் ஒரு நாளிரவில் நித் திரைசெய்யும் வேளையில் வேலாயுதமேந்திய திருக் கரத்தையுடைய முருகக்கடவுள் கனவிற்றோன்றி அர சனே நம்முடைய திருக்கோவில் சந்நிதிக்கு முன்புள்ள சமுத்திரத்தின் ஓர்பக்கத்தில் வந்து நம்மைத் தேடிப் பார்த்தால், எலுமிச்சம் பழமும் புஷ்பமும் மிதக்கும். அப்

போது அதற்கு நேரான ஆகாயத்தில் ஒரு கருடன் வட்ட மிடும். அவற்றிற்கு நேரான சமுத்திரத்தில் நாமிருக்கின்ரும். அதற்கு வேண்டிய சனங்களுடன் அவ்விடம் வந்தால் நாம் ஆலயத்திற்கு எழுந்தருளி வருவோமென்று சொல்லி மறைந்தருளினுன். உடனே அரசன் விழித்தெழுந்து திருவருளைப் பாடினுன் பரவினுன் பலமுறை கொண்டாடினுன் மெய்புளகமாயினுன், நாளை யுதையத்தில் நல்ல சுபமுகூர்த்தம் இருக்கின்றது சுவாமியைக் கடலிலிருந்து எழுந்தருளப் பண்ணிக் கொண்டு வரவேண்டுமென்று எல்லோர்க்குந் தெரிவித்தான். அதன் பின்பு மறுநாள் தான் குறித்த சுபமுகூர்த்தத்தில் திரிசுதந்தரர் என்னும் பிராமணர்களும் மெய்யடியார்களும் ஆதி சைவர்களும் மற்றவர்களும் தன்னைச் சூழ்ந்து வரவும் நாட்டியப் பெண்கள் நடனம் புரியவும் வித்துவான்கள் கவிதைகள் பாடவும் பலவித வாத்திய முழங்கவுஞ் சென்று பல மரக்கலங்களோடுஞ் சனங்களுடனும் கடலிற் போய்ப் பார்த்தான். முருகக்கடவுள் கனவிற் ருேன்றித் திருவாய் மலர்ந்தருளிய படி அங்கே எல்லாக் குறிகளும் ஒத்திருந்தன. உடனே அரசன் அங்குள்ளவர்களைப் பார்த்து நீர்நிலை யறிந்து சுவாமியைத் தேடுங்கள் என்ருன் எல்லோருங் கடல் நீரில் இறங்கி நீர்நிலை யறிந்து தேடினுர்கள். அவ்வேளையில் முருகப் பெருமான் தனது சொரூபத்தோடு கடலின் மேலெழுந்து மின்னலி னெளிபோற் பிரகாசித்தான். அதைக்கண்டு ஆச்சரியமுற்றுச் சுவாமியை மரக்கலத்தில் ஏற்றி மிகவுஞ் சந்தோஷம் உடையவனுய்க் கடற்கரைக்குக் கொண்டு வந்து கடலின் அருகிலுள்ள செந்திலாலயத்திற் சிறந்து விளங்குஞ் சிங்காதனத்தின்மீது. வைத்து ஆகம விதிப்படி சுவாமிக்குக் கும்பாபிஷேகமுஞ் செய்வித்தான்

என்பார், "அந்தமன்னனாற் செந்தின்மூர்த்தி காராழி விட்டு மீண்டதுவும்" என்று கூறினார்.

"சீர்பெருகுங் கொற்கைத் திருநகரின் விண்ணதியா ம்
நீர்பெருகத் தாங்குமுடி நின்மலனால்—ஏர்பெரு க
வந்துதித்த மும்மரபின் மன்னவருள் மீனவனா ல்
பந்த முறுஞ்சிறையில் பட்டுழலும்—அந்தரஞ்சே ர்
காரையஞ்சல் என்றுமுனங் காத்த குலத்துதித்தா ன்
பாரையஞ்சல் என்றாண்ட பாக்கியவான்—தாரகமா ம்
மாரிமங்க லத்தில்வரு மாதந்தோ றும் பொழியு ம்
மாரிமங்க லத்தோர் மரபுடையான்—நேரலரை ச்
சாய்த்து மகுடந் தரித்தகரு நாடகத்தி ன்
வாய்த்தகொற்ற வேந்தருக்கு மந்திரியாய்—ஏத்துமொ ரு
தென்னாட்டு நெல்வேலிச் சீமையெலாம் ஓர் குடைக்கு ள்
சொன்னாட்டி யாண்ட துரந்தரிகன்—எந்நாட் டு
மண்டலிக ரும்பணியும் வார்கழலான் யாசகர்க்கு க்
கொண்டலென நல்குங் கொடையினான்—எண்டிசையு ஞ்
சென்று விசையஞ் செலுத்தி யெதிர்ந்தாரை ப்
பொன்றுவித்த வீரப் புகழினான்—என்று ம்
அழியாச் சிவாலயமும் அந்தணர்கட் கில்லு ம்
எழிலாய்ப்ர திட்டைசெய்த ஏந்தல்—அழகுடை ய
பன்னிரண்டு கையானைப் பாவைவள்ளி தெய்வா னை
மின்னிரண்டு சேர்கருணை மேகத்தை—என்னிரண் டு
பாவவினை நீக்கும் பரனை மறவா த
பாவகத்தான் நாவலர்சொல் பாவகத்தான்—கோ வை
வடமலையப் பன்மாதர் மையல்கொளுங் கா வை
வடமலையப்ப மகிபன்—திடமுறுநா ள்
சங்கினங்கள் ஈன்ற தவளமணி ஒளியா ல்
கங்குலை யும்பகல்போல் காட்டிடவே—துங்கமுறு ஞ்

சிந்தூர் அலைவாய்ச் செறிவளங்கொண் டோங்குதிரு ச்
செந்தூரில் வாழ்ந்தருளும் சிற்பரனும்—கொந்தூர்தா ர்
ஆறிரண்டு தோளான் அழகு திருவுரு வை
மாறிரண்டார்க் கெட்டா வடிவையெடுத்—தேறி வரு ம்
நாவாயின் ஏற்றிவைத்து நண்ணும் அவர்பதிக்கு ப்
போவார் மிலேச்சர் அதுபோழ்தின்—யாவுமா ய்
எங்கும் நிறைந்திருக்கும் எந்தை அருளாலோ ர்
பொங்குமழை காற்றும் புசலுமாய்—அங்குவர க்
கல்லார்கள் யாரும் கடுக மயங்கியிந்த ப்
பொல்லா வுருவின் புணர்ப்பென்றே—எல்லாரு ம்
தூக்கி எடுத்துத் தொடுகடலில் ஆழ்த்திவிட் டு
நீக்கி நடந்தார் நிமிடமதில்—காக்குமன
தன்னையில்லாப் பிள்ளையைப்போல் ஆதரவி லாதுசிந் து
நன்னகர் உள்ளார் நலியுநாள்—உன்னி ல்
கருவுருவைக் காணவொட்டாக் காரணன்தன் ஞான த்
திருவுருவைச் செய்து சிறப்பாய்—உரிமையுட ன்
வேறுபிர திட்டைசெய வேண்டுமென எண்ணியவ ன்
மீறிவரு நித்திரைசெய் வேளையிலே—வேல்திகழு ம்
கையானும் அங்கண் கனவினில் வந்துரைக்கு ம்
பொய்யாத கீர்த்திப் புரவலா—மெய்யா ந ம்
சன்னிதிக்கு முன்பாஞ் சமுத்திரத்தில் ஓர்புடையி ல்
நன்னிதிபோல் அங்குவந்து நாடினல்—உன்னதத்தி ல்
வல்ல கருடன்ஒன்று வட்டமிடும் நேரா ன
எல்லை தனில்யாம் இருக்கின்றேம்—ஒல்லையினி ல்
வேண்டும் சனங்களொடு மேவில் எழுந்தரு ளி
ஈண்டு வருவோம் எனஇயம்பி—ஆண்டகையு ம்
போயினன் பூமி புரந்தரனுய் எவ்வுயிர்க்கு ம்
தாயனுன் நித்திரையுந் தான்விழித்துச்—சேயருளை ப்

பாடினான் பாடிப் பரவிப் பலமுறை கொ ண்
டாடினான் மெய்புளகம் ஆயினான்—தேடரி ய
நல்ல சுபமுகூர்த்தம் நாளை உதையமதி ல்
செல்லஎன்றே யார்க்குந் தெரிவித்துத் தொல்லைம றை
தேறி மகஞ்செய் திரிசுதந்த ரத்தர் எனு ம்
கூறு மறையோர் குழாம்நெருங்க—மாறிலா த்
தொண்டர்களும் ஆகமநூல் சொல்லுமுதல் சைவர்களும்
தண்டுதலின் றிப் பிறருந் தற்சூழ—ஒண்டொடிக் கை
மின்னார் பரத விதத்தின் நிருத்தம் புரி ய
நன்னா வலர்கவிகள் நன்கிசைப்பக்—கொன்னாரு ம்
பேரிசின்னங் காளம் பெருகுமுழ வந்திமி லை
மூரிநடு மேளம் முழங்கிவர—வாரிதியி ல்
சென்றுபல சோங்கினொடும் செவ்வேள் உரைத்தப டி
ஒன்றும் குறிகளெலாம் ஒத்திருக்க—நின்றவ ரை
நீரின் நிலையறிந்து நேடுமின் வல்லையென்று ன்
ஆரும் இறங்கினார் அக்கணமே—நேரிலா ன்
தன்னுருவோ டங்கண் சலதியின் மீதெழுந் து
மின்னுருப்போல் தோன்ற வியப்படைந்து—அங்கிலை யே
கப்பலின் ஏற்றிக் களிப்புக் கடலினொடு ம்
அப்புக் கடலின் அருகாக—இப்புவிக்கு ள்
சென்னி மணியாய்ச் சிறந்தசெந்தில் ஆலயத்தி ல்
மன்னியசிங் காதனமேல் வைத்தருளி—நன்மைதரு ம்
ஆகமத்தால் கும்ப அபிஷேகமும் நடத் தி
வாகைபெறச் செந்தூரை வாழ்வித்த—மாகனவா ன்"

இது வடமலையப்ப அரசன்மீது முற்காலத்து இருந்த ஏகசந்தக்கிராகி என்னும் வித்துவான் பாடிய வடமலை வெண்பாவிற்குத் திருச்செந்தூர்க் குஞ்சி அய்ய பாரதிகள்

இயற்றிய சிறப்புப் பாயிரத்துள் கூறப்பட்டுள்ளது இதனால் மேற்குறித்த சரிதத்தின் உண்மை இனிது விளங்கும்.

சண்முகக்கடவுளைக் கடலிலிருந்து எழுந்தருளப் பண்ணிக்கொண்டு வந்த காலம் இன்ன காலம் என்பதை இதனடியில் வருங் கீர்த்தனத்தில் காண்க. இக்கீர்த்தனம் திருச்செந்தூர்த் தலபுராணம் பாடினவரும் திரிசுதந்தாருமான வென்றிமாலைக் கவிராய ரவர்கள் பாடியது.

கீர்த்தனம்.

இராகம். மத்தியமாவதி. தாளம் ஆதி.

பல்லவி.

இப்போது தேவரீரெழுந்தருளின
தெல்லோர்க்கும் நல்லகாலம்.

அநுபல்லவி.

செப்பெனும் பூண்முலை வள்ளி பங்காளரே செல்வரே
கல்வி பயிலுஞ் செந்தூரினில் (இப்போது)

சரணங்கள்.

எண்ணூற்றிருபத்-தொன்பதாமாண்டு-இசையும்விஜய-
வருடந்தை மாதத்தில்-நண்ணுமிருபத்து-மூன்றாந்
தெய்தியில்-நல்ல வெள்ளி வாரத்தில்-புண்ணியஞ்சேருந்
திரயோதசியில்-புனர் பூசத்திற் பூர்வ- பக்ஷத்தின்மீது
னத்தில்-விண்ணவர் போற்றும்-இந்திரநாம
யோகத்தில்-மேன்மேலுஞ் செந்தூர்க்கு-நன்மை
யுண்டாகவே- (இப்போது)

சந்திர னில்லாத-வானம் போலவும்-சைவ நெறியில்லா-
வையகம் போலவும்-ஐந்தருவுடைய இந்திரனில்லாத-அண்
டர் பதிபோலும்-இந்த நிலத்திற்-றிருப்பாண்டிச் சீமையின்-
ஏழுதிரைக்கடல்-சூழும் குணபதி-செந்தினகர்வளம்-
அழிந்துபோகாமல்-தேசத்திலுள்ளோர் செய்-பூஜா
பலத்தினல்- (இப்போது)

சென்முகங் கண்ட-பயிர்போலப் பங்கயம்-செங்கதிர்
கண்டவா-போலே பெற்றதோர்-தாய் முகங்கண்ட-
குழவியைப் போலிந்தத்-தாரணியிரேழும்-நின்முகங்
கண்டிரு-பாதமலர் போற்றி-நிரந்தரஞ் சொன்ன-
வரங்கள் கொடுக்கும்-கொன்னிலே வேலரே சண்முக
பாலரே-கோலாகலாமயில்-வாகனரே சாமி (இப்போது)

தாரேறு வெற்பெனும்-ஈராறு திண்டோளும்-தண்டை
சிலம்பணி-புண்டரிகத்தாளும்-ஓராறு சென்னியும்-
சண்முக சேவையும்-ஒண்பொற்குழைக்காதும்-போரேறு
வேலேந்து-செங்கையுங்கண்டன்பர்-போற்று முருகரே-
மாமால் மருகரே-காரேறு தண்டலே-சூழுஞ்செழுந்தமிழ்க்-
காவை வடமலே-யப்பன் தொழுதிட (இப்போது)

பொன்னுட்டினும் நன்னுடென்னும் பாண்டிவள நாட்டில் தாமிரபருணி புண்ணிய தீர்த்தத்தின் தீரத்தில் ஆழ்வார் திருநகரி என்னுங் குருகையூரில் இற்றைக்கு ஏறக்குறைய (280) இருநூற்றெண்பது வருடங்களுக்கு முன் அந்தணர் குலத்தில் ஒருவர் இருந்தனர். அவர் தமது வைணவ மதத்திற்கு ஏற்ப ஆசார அனுஷ்டானங்களோடு தமிழ் வல்லவராய்த் தம்மதத்தில் ஆவேசமுற்றுப் பன்னிரு நாமமுந் தரித்துத் துழாய்மணி அணிந்து தம் ஊரிலுள்ள

நாராயணனை நாடோறுஞ் சென்று வழிபட்டு வருவர். அப் பகவனுக்கு அன்பு பூண்ட பாகவதர்கள் எக்குலத்து எவ ராயினும் கண்டபொழுதே தண்டம்போல் வணங்கி மற்றைய தெய்வங்களையும் அவர்களை வழிபடும் அடியார் களையும் பசுக்களென்றும் பாவிகளென்றும் முறையே நிந்தை செய்வதே நியமமாகக் கொண்டு பலரும் இவர் கொடியரெனக்கூறும் வண்ணம் வாழ்ந்திருந்தனர்.

திருச்செந்தூரில் எழுந்தருளி யிருக்கும் அறுமுக இறைவன் அவ்வைணவ வேதியர் கூறும் நிந்தை பொருது அடக்கி அடிமை கொள்ளவோ அல்லது இவர் காரணமாக மற்றையோர்க்கு அறிவுறுத்தற்கோ ஓர் திருவிளையாடலைத் திருவுள்ளத்து அமைத்து ஓர் நாள் இரவில் அவ்வேதியர் சொப்பனத்தில் முன் குடுமியோடு சுந்தர அந்தணராய் எழுந்தருளி நம்மூர் மாயோன் மருகன் என்னும் முருகப் பெருமான்மீது அரிய பாமாலை அணிவாயாயின் அரிய பயன் அனந்தம் பெறுவாய் என்றனர். உடனே திடுக் கென விழித்து அழலின் அகப்பட்ட புழுப்போல் துடித்துக் கற்பின் மிக்கதோர் காரிகையை ஆண்டகை ஒருவன் மூண்டெழும் அவாவால் தொடரின் அம்மாது படுந் துன்பமென்னத் துயருற்றுப்பின் அவ்விரவு முழு தும் துயிலாது கழித்து விடிந்த பின்னுந்துயரோடு தமது வழிபடு கடவுளாகிய திருமால் சந்நிதியில் சேர்ந்து கருணா நிதியே அடியேன்மீது கிருபை சிறிதும் இல்லைபோலும் அறிவகன்ற வேடுவர் இறைஞ்சும் சிறிய தேவனை என்னை அடிமை கொள்வதென்று கூறி அன்றிரவு ஆலயத்தில் அச்சுதனைக் கருதிக் கொண்டு நித்திரை செய்தார்.

அச்சமயம் ஒரு கரத்தில் வேலும் மற்றொரு கரத்தில் சக்கரமுமாக விளங்கத் தோன்றிய ஒரு மூர்த்தி இவ்வடிவங் கண்டனையோ திருச்செந்தூர் வேலவனை நீதுதிசெய்தற்கு ஐயம் என்னை யென்று கூறி மறைந்தருளினர்.

உடனே விழித்து, எரிகின்ற அக்கினியில் நெய் சொரிந்ததைப் போன்று அளவில்லாத் துன்பக் கடலி டையே மூழ்கி மறுநாள் இரவும் கோயில் அர்த்தமண்டபத் தில் நித்திரைசெய்தார். அங்ஙனம் நித்திரை செய்யும் போது கேசவன் சதுர்ப்புஜம் சங்கு சக்கரமாதி அவயவங் களோடு தனது யதார்த்த வடிவத்தால் வந்து முன்னிற்பக் கண்டெழுந்து தாழ்ந்து நெஞ்சுருகிக் கண்ணீர் பெருக அன்புடன் தேவாதிதேவ அரவணையில் அறிதுயில் அமர்ந்து தரணி புரக்கும் மாதவ பேயுடன் ஆடும் புலித் தோலுடையோன் சேயன் தானே என்னைத் தொண்டு கொள்ளத் தக்கவன் ஆவன் நேற்றிரவு தேரீரது ஆழியும் அவன் வேலுங்கொண்டு என்முன் வந்தவன் எவனே தேவரீரை அன்றி மற்றைய தேவரை மறந்தும் மதிப்பனே என்று இவ்வாறு இசைப்பவும் அதற்கு விஷ்ணு மூர்த்தி அன்ப மயங்குதல் ஒழிக. இப்படிவத்தில் இதுகுறித்தாய் அப்படிவத்தில் அது குறித்தாய் ஆதலின் அப்படிவ வாச னைச் சேடம் உனக்கு இருக்கின்றது அதைத் தீர்த்துக் கொள்ளுதி சண்முகன் எனது அமிசமே என அறிஞர்கூறு வர், எக்கடவுளரும் எனது அமிசமுந்திருவின் அமிசமுமாக இரண்டு அமிசமும் உடையவராவர் இஃது உண்மையே, ஆணவத் தொடக்கால் துன்பமுறுதே என்று கூறி மறைந் தருளினர்.

பின்பு விழித்து மாயோன் கூற்றை ஆயாதவராய்ச் சேற்றில் காலாழ்ந்த ஒருவனை வேலால் எறிந்தது போலும்

நீந்தக் கூடாத் துயர்க்கடலில் ஆழ்ந்து நங்கடவுள், துஞ்சி ஞரோ கனவில் தோன்றிய கள்வன் கந்தன் என்றே நிச்சயித்து அரவணைச் செல்வற்கு ஆட்பட்ட யான் மற்றவர்க்கு ஆட்படுதலினும் உயிர்விடுதல் நன்றென்று பிராணத் தியாகம் செய்வதற்குரிய உபாயங்களை அன்று இரவு முழுதுங் கருதிக் கொண்டு கதிரவன் உதயத்தை எதிர்பார்த்திருந்தனர்.

அக்காலத்துப் பாண்டி நாட்டை ஆளும் வடமலையப்ப அரசன் எக்காரணத்தாலோ அன்று தங்கி நித்திரை செய்யும்போது முருகவேள் கனவில் தோன்றி இவ்வூர்த் திருமால் ஆலயத்தில் நித்திரை செய்யும் மறையவன் விடிந்தவுடன்பிராணத் தியாகம் செய்வதற்கு எண்ணி இருக்கின்றனன் அவன் அது முடிக்குமுன் வெள்ளித்தாள் பூட்டிக்காத்தல் கடனெனை ஆக்ஞாபித்து மறைந்தனர்.

மன்னன் விழித்து எழுந்து காவலாளரை அழைத்து அவ்வந்தணரை இவ்விடங் கொண்டு வாருங்கள் என்று விடுத்தான். அவர் சென்று தேடி ஆலயத்தில் இருந்த அந்தணரைக் கண்டு நம் அரசன் நம்மை அழைத்தனர் ஆதலால் வருக என்று நெருங்கினர். அதற்கு அவர் காலைக் கடன் முடிப்பவர்போல் காலங் கழிக்க முயலத் தூதர் மலவிசர்ச்சனம் செய்யுமளவும் மனம் பொறுதவர்களாய்ப் பின்பு அரசனிடத்துக் கொண்டுபோய் விட்டனர். மன்னவன் உடனே எழுந்து கைகூப்பி ஆதனம் அளித்துக் குன்று தோறுடுங் குமரன் இவ்வெள்ளி விலங்கினைத் தரித்துக் கொள்ளக் கட்டளையிட்டு இருப்பதை அறிவித்து முன்னாள் பிதாமகற்கு இட்டதனை நமக்குங் கிடைக்கத் தவஞ் செய்ததாமெனத் தளையிட மறுக்க முடியாது

சும்மா இருந்தனர். பின்பு அரசன் சில காவலரையும் சில பிராமணர்களையும் நோக்கி நியமம் தவறாது உணவு அளிக்கவும் கல்லில் முட்டுதலாதியால் இறவா வண்ணம் காக்கவும் வேதியர் இறந்தனரேல் நும் உயிருடன் நம் உயிரும் நீங்குவது திண்ணமெனவும் வற்புறுத்திக் காவற் சாலைக்கு அனுப்புவித்தனன். அரசன் தமது முக்கிய அரசாட்சியாகிய திருநெல்வேலிக்கு ஏகாது அவ்வூரில் இருந்தே அரசுரிமையைக் கைக்கொண்டனன் சிலநாள் துன்புற்று இருந்த அவ்வந்தணர் முருகப் பிரான் திருவருளை நிறையப் பெறுங்காலம் வாய்த்ததால் திருமாலும் பணித்த பணியில் ஐயமுற்றுப் பின் துணிந்து பதிற்றுப் பத்தந்தாதி என்னும் பிரபந்தத்தைப் பாட ஆரம்பித்து

"செய்வதொன் றறிகிலேன் செழுமென் போதுதாட்
பெய்வதொன் றறிகிலேன் பேதையேன் சுட ர்
வைதிகழ் வேற்படை முருக வென்ற ளை
கொய்தெனக் கிரங்கியாட் கொள்ள வேண்டுமால்" என்னும்

எட்டாந் திரு விருத்தத்தைப் பாடும் போது சூழ்ந்திருந்தோர் நடுங்கப் பூட்டியதளை படீரெனப் பொடியாய்ப் போயிற்று.

அப்பொழுது கார்த்திகேயப் பெருமான் அரசன் சொப்பனத்தில் எழுந்தருளி விலங்கினால் கலங்கிய நமது அன்பன் நமது அடிமையாய்த் துதித்ததால் அவன் தளையைக் கொய்தனம்நீயும் உடனிருந்து அப்பனுவலைக் கேட்டு முடிந்தபின் நம்முன் அரங்கேற்றி வேண்டிய பரிசு கொடுத்தியென மொழிந்து மறைந்தருளினார்.

அரசன் எழுந்து மகிழ்வுடன் இருக்கும்போது காவலரில் இருவர் அரசனிடம் ஓடிவந்து நடந்த அதிசயத்தை

விளம்பினர். அக்கணமே வேந்தன் சென்று அம்மாதவர் பாதம் பணிந்து அவரால் திருவாய் மலர்ந்து அருளப்பட்ட அரிய பாடல்களைக் களிப்புடன் கேட்டு முற்றிய பின் அரங்கேற்றும் சுபதினம் குறித்துத் திரும்பி அல்லும் பகலும் நித்திரை செய்யாது காத்த காவலருக்குத் தக்க பரிசு கொடுத்து மிக மகிழ்வித்து உங்களது பிராணனும் நம் பிராணனும் குகேசன் அருளால் உய்ந்தன என உரைத்து உத்தரவு அளித்துவிட்டுக் குறித்த தினத்தில் தானும் பாவலரும் மற்றையோர் சூழ்ந்துவரத் திருச்செந்தூருக்குப் போந்தனன்.

அங்கு ஆலயஞ் சிறப்பித்து வேலவற்கு அபிஷேக நிவேதன அலங்கார முதலியவைகளைச் செய்வித்து அச் சந்நிதியில் பிரபந்தத்தை வாசித்து முடித்து அதற்குச் சிறைவிடந்தாதி என்னும் காரணப் பெயர் சூட்டித் திரவியம் ஆபரணம் சிவிகை முதலியவற்றை அரசன் அந்த அன்பருக்கு வழங்கினன் என்பார். "வெந்தகைப் பொலா வைணவன் பல்பா விண்டநாள் கொடை மிக வழங்கலும்" என்று கூறினர்.

"கந்த வார்குழல் கௌரி நெல்லையில் கனவு இரண்டோர்கால் காட்டி ஆண்டதும்" என்ற சரிதத்தின் விரிவை வந்த வழிக் காண்க.

வடமலையப்ப அரசன் இவ்வாறு தெய்விகத் தன்மை பொருந்திய ஆயிரஞ் சரித்திரங்களுக்கு உரியவன் என அறிக.

இங்ஙனம் கூறியவாற்றால் வடமலையப்ப அரசனுக்கு இவ்வாறான மாஹாத்மியம் உண்டென்றால் அவனுடைய

ஞானதேசிகராகிய ஸ்ரீ சோலையசுவாமிகளுக்கு அத்தியந்தம் அற்புதமான மாஹாத்மியம் உண்டு என்பதில் சொல்ல வேண்டுவது என்னை என்பது பெறப்படுகின்றது.

கார்காத்தார் பூர்வீக நிலைமை என்னும் நூலில் வடமலையப்ப அரசன் கொல்லம் (795) எழுநூற்றுத் தொண்ணூற் றைந்தாம் ஆண்டு சோழ தேசத்தில் சோழபுரம் என்ற ஊரில் பிறந்தார் என்றும் (813) எண்ணூற்றுப் பதின்மூன்றாம் ஆண்டில் திருநெல்வேலிக்கு வந்தாரென்றும் (821) எண்ணூற்று இருபத் தொன்ரும் ஆண்டில் சிவபுண்ணியங்கள் செய்ய ஆரம்பித்தார் என்றும் (851) எண்ணூற்று ஐம்பத்தொன்ரும் ஆண்டில் பரமபதம் அடைந்தார் என்றும் சொல்லப்பட்டடிருக்கின்றன.

சரமகவி.

“நாவிருநூற் றைம்பத்தோராண்டு ராக்ஷத வருடந்தன்னில்
ஆலமே அலருந் திங்கள் ஐப்பசி யிருபா னிரண்டில்
சீலமா மதுரை வேந்தன் செகதலத் தாசை விட்டு
மாவிரு பாதஞ் சேர்ந்தான் வடமலைப் பூபன் மன்னே”

இவற்ருல் வடமலையப்ப அரசன் சனன முதல் பரமபதம் அடைந்தது வரையுள்ள காலங்கள் விளங்குகின்றமையால் அவனுடைய ஞானசிரிய ராகிய ஸ்ரீ சோலைய சுவாமிகள் காலமும் இற்றைக்கு ஏறக்குறைய (300) முந்நூறு வருடங்களுக்கு முன்பெனக் கொள்ளலாம். (அ)

சோலை யப்பெயர்ப் பரம யோகிதான் சொன்ன
பாடலின் ருெகைய னந்தமாம்
வேலை தொட்டுமா மலய மட்டுமே மிகவு
லாவுநீர் மேவி ருெனர்நாட்

காலை யிற்றிருக் குருகை யூரினிற் கரிய
னன்பர் நேர் கரும வேதிய ர்
மாலை வீதிவா யொருமனைத்தலை வாயி
லிற்சிவா வெனவி ருந்தனன் (கூ)

இ-ள்:—சோலையப்பெயர் பரமயோகி-ஸ்ரீ சோலையசுவாமிக ளென்னுந் திருநாமமுடைய சிவயோகியார், சொன்ன-திருவாய் மலர்ந்தருளிய, பாடலின் தொகை-திருப்பாடல்களின் எண்ணம் அனந்தமாம்-அளவில்லாதனவாகும், வேலை தொட்டு மாமலய மட்டும்- (தாமிரபருணி நதியின் சங்கமத்துக்கு ஸ்தானமாகிய) கடல் தொடங்கி (அந்நதியின் உற்பத்திக்கு ஸ்தானமாகிய) மகத் துவம் பொருந்திய பொதிகைமலை வரையும் (உள்ள பாண்டி நாட்டில்), மிகவுலாவுநீர் மேவினன்-பெரும்பாலுஞ் சஞ்சரிக்குந் தன்மையை விரும்பிய ஸ்ரீ சோலையசுவாமிகள், ஓர் நாள் காலை யில்-ஒருநாள் பிராதக்காலத்தில், திருக்குருகை ஊரினில்-ஆழ் வார் திருநகரியென்னுந்திருப்பதியில், கரியன் அன்பர் நேர்-வைஷ்ணவ சமயத்தவருக்கு உடன்பாடான, கருமவேதியர்-கரும காண்ட சுருதியை அநுசரித்த பிராமணரது, மாலை வீதிவாய்-(வீடுகள்) வரிசையாய் அமையப்பெற்ற திருவீதியில், ஒருமனைத் தலைவாயிலில்-ஓர் வீட்டு முன்வாயிற் புறந்திண்ணையில், சிவா என இருந்தனன்-(தமது திருவாக்கால்) சிவாவென்று சொல்லி வீற்றி ருந்தனர். எ—று.

பொ-ரை:— ஸ்ரீ சோலையசுவாமிகள் என்னுந் திருநாம முடைய சிவயோகியார் திருவாய் மலர்ந்தருளிய திருப்பாடல் களின் எண்ணம் அளவில்லாதன வாகும் தாமிர பருணி நதியின் சங்கமத்துக்கு ஸ்தானமாகிய கடல் தொடங்கி அந்நதியின் உற் பத்திக்கு ஸ்தானமாகிய மகத்துவம் பொருந்திய பொதிகைமலை வரையும் உள்ள பாண்டி நாட்டில் பெரும்பாலும் சஞ்சரிக்கும் தன்மையை விரும்பிய ஸ்ரீ சோலைய சுவாமிகள் ஒரு நாள் பிராதக் காலத்தில் ஆழ்வார் திருநகரி என்னுந் திருப்பதியில் வைஷ்ணவ

சமயத்தவருக்கு உடன்பாடான கரும காண்ட சுருதியை அநு சரித்த பிராமணரது வீடுகள் வரிசையாய் அமையப்பெற்ற திரு வீதியில் ஓர் வீட்டு முன்வாயிற் புறந் திண்ணையில் தமது திரு வாக்காற் சிவா என்று சொல்லி வீற்றிருந்தனர். எ—று.

தான். ஏ. அசைநிலைகள். (கூ)

அதுவி னுவியம் மனையி லுற்றவோ ரந்த
ணன் கொதித் தருகு வந்து நீ
கதுமெ னுவெழுந் தேகு கென்னவே கடுக
டுத்தனன் கண்டு தொண்டர் தா ம்
பொதுவ னுமுதற் கடவு ளேபலோர் போற்று
மாறுருப் புனையு முண்மைதே ர்
சதுர னன்றுநன் றெனவவ் வூர்மயா னந்த
னிற்புகுந் தான்வி ரைந்தரோ (ய)

இ—ள்:— அது வினுவி-அந்தச் சிவா வென்ற சொல்லைக் கேட்டு, அம்மனையில் உற்ற ஓர் அந்தணன் - அவ்வீட்டிலிருந்த ஒரு வைஷ்ணவப் பிராமணன், கொதித்து-கோபங்கொண்டு, அருகுவந்து- (ஸ்ரீ சோலைய சுவாமிகளுக்குச்) சமீபமாய் வந்து, நீகதுமெனு எழுந்து-(அவரைப் பார்த்து யாது சொன்னுய் இவ் விடத்தை விட்டு) நீ விரைவாக எழுந்து, ஏகுக என்ன-ஓடுக ஓடுக என்று, கடுகடுத்தனன்- வெடு வெடுப்பாய்க்கூறினுன்,-தொண்டர்-சிவயோகியாராகிய ஸ்ரீ சோலைய சுவாமிகள், கண்டு-(அந்த வைஷ்ணவப் பிராமணனை) நோக்கி, பொதுவனு முதற்கடவுளே-(சர்வசமய) சமரசனுகிய பரமேச்சுரனே, பலோர் போற்றுமாறு-பற்பல சமயவாதிகளும் வணங்கும்படி, உருபுனையும்-(அவரவர் தெய்வமாக) உருவத்தைத் தரிப்பான், உண்மை தேர்-(நீ இந்த) யதார்த்த நிலையை அறியும், சதுரன் அன்று-விவேகமுடையவன் அல்ல, நன்று என-(இதோ போகின்றேன்) நல்லது என்று, விரைந்து-அதிவேகமாய் (நடந்து), அவ்வூர் மயானந்தனில் புகுந் தான்-அந்த ஆழ்வார் திருநகரிச் சுடுகாட்டை அடைந்தார். எ-று.

போ-ரை:— அந்தச் சிவா என்ற சொல்லைக் கேட்டு அவ் வீட்டில் இருந்த ஒரு வைஷ்ணவப் பிராமணன் கோபங்கொண்டு ஸ்ரீ சோலைய சுவாமிகளுக்குச் சமீபமாய் வந்து அவரைப் பார்த்து யாது சொன்னாய் இவ்விடத்தை விட்டு நீ விரைவாக எழுந்து ஓடுக ஓடுக என்று வெடு வெடுப்பாய்க் கூறினான். சிவயோகி யாராகிய ஸ்ரீ சோலைய சுவாமிகள் அந்த வைஷ்ணவப் பிரா மணனை நோக்கிச் சர்வசமய சமரசனாகிய பரமேச்சுரனே பற்பல சமயவாதிகளும் வணங்கும்படி அவரவர் தெய்வமாக உருவத்தைத் தரிப்பான். நீ இந்த யதார்த்த நிலையை அறியும் விவேக முடைய வன் அல்ல இதோ போகின்றேன் நல்லது என்று அதிவேகமாய் நடந்து அந்த ஆழ்வார் திருநகரிச் சுடுகாட்டை அடைந்தார்.

எ—று.

எ. தாம் அரோ அசை நிலைகள். (ல)

வெந்த நீறுடன் முழுத ணிந்துவெள் ளென்பு
மாலைதோண் மீதி விட்டுவெ ங்
கந்த மாருமூ மத்தெருக்கலர் கவினச்
சூடியே கைக்க பாலத் தோ
டந்த கற்செருத் திட்ட மூர்த்திபோன் றந்த.
வூரினந் தணர்தம் வீதிவா ய்
வந்தனன்சிலோ ரோடி னார் சிலோர் வாழுந்
தம்மனை வாயின் மூடினார் (கக)

இ—ள்:— வெந்த நீறு-(மேலும் ஸ்ரீ சோலைய சுவாமிகள் பிணங்களை) வேகச்செய்தலால் உளதாகுஞ் சாம்பலை, உடல் முழு தணிந்து-(தமது) திருமேனி முழுவதும் பூசி, வெள் என்புமாலை-வெண்மை நிறமாகிய எலும்பு மாலையை, தோள் மீதில் இட்டு-(இரு) புயங்களிலும் அணிந்து, வெங்கந்தம் ஆரும் ஊமத்து எருக்கு அலர்-வெப்பமான வாசனை பொருந்திய ஊமத்த மலர்

மாலையையும், எருக்குமலர் மாலையையும், கவினச்சூடி-அழகுபெற அணிந்து, கைக்கபாலத்தோடு-கையின் கண் தரித்த மண்டை யோட்டுடனே, அந்தகன் செகுத்திட்ட மூர்த்திபோன்று-யமனைக் (காலால் உதைத்துக்) கொன்ற கால காலர் (எழுந்தருளியது) போல, அந்த ஊரின் அந்தணர் தம் வீதிவாய்-அந்த ஆழ்வார்திரு நகரி வைஷ்ணவப் பிராமணர் (வாசம் பண்ணுகின்ற) திருவீதியின் கண், வந்தனன்-எழுந்தருளினர், சிலோர் ஓடினர்-(அக்கோலத்தைக் கண்ட) சிலர் ஓடினர், சிலோர் வாழுந்தம் மனைவாயில்-சிலர் வாசஞ் செய்கின்ற தங்கள் வீட்டு வாயிற்களை, மூடினர்-மூடுவாராயினர். எ—று.

போ—ரை:—மேலும் ஸ்ரீ சோலைய சுவாமிகள் பிணங்களை வேகச் செய்தலால் உளதாகுஞ் சாம்பலைத் தமது திருமேனி முழுவதும் பூசி வெண்மை நிறமாகிய எலும்பு மாலையை இரு புயங்களிலும் அணிந்து வெப்பமான வாசனை பொருந்திய ஊமத்த மலர் மாலையையும் எருக்குமலர் மாலையையும் அழகுபெற அணிந்து கையின் கண் தரித்த மண்டையோட்டுடனே யமனைக் காலால் உதைத்துக் கொன்ற காலகாலர் எழுந்தருளியது போல அந்த ஆழ்வார் திருநகரி வைஷ்ணவப் பிராமணர் வாசம் பண்ணுகின்ற திருவீதியின் கண் எழுந்தருளினர். அக்கோலத்தைக் கண்ட சிலர் ஓடினர் சிலர் வாசஞ் செய்கின்ற தங்கள் வீட்டு வாயிற்களை மூடுவா ராயினர். எ—று.

ஏ-அசைநிலை

சிலோர் இரண்டும் இடைக்குறைந்து நின்றன. (கக)

அந்த மட்டில்விட் டேகி டாதவ்வூ ரால
யத்தினுட் போதல் வேட்டன ன்
பைந்த கைப்பிரா னடிய ரிற்பலோர் பயமெய்
திக்கபா டங்கள் சாத்தின ர்

சிந்த மோதிடக் கருது மூர்க்கர்முற் றீய
பேய்கள்பூ தங்கள் காவ லா
வந்த வாறுதோற் றியதவ் வேளையில் வடம
லைப்பெயர் மன்வந் தானரோ (கஉ)

இ—ள்:—அந்தமட்டில் - அவ்வளவு செய்கையோடு, விட்டு ஏகிடாது-(அவ்விடத்தை) விட்டுநீங்காது, அவ்வூர் ஆலயத்தினுள்- அந்த ஆழ்வார் திருநகரி (ஆதிநாதப்பெருமாள்) கோயிலினுள்ளும், போதல் வேட்டனன்-செல்ல விரும்பினர், பைந்தகைப்பிரான்- அழகிய பெருங்கருணைக் கடவுளாகிய ஸ்ரீ மஹாவிஷ்ணுவினு டைய, அடியரில் - திருத்தொண்டரில், பலோர்-அநேகர், பயம் எய்தி-(அதனைக்கண்டு தமது சுவாமியினுடைய ஆலயம் ஆசௌ சமாகிவிடுமென்று) அச்சங்கொண்டு, கபாடங்கள் சாத்தினர்- (அவ்வாலயத்தின்) பல கதவுகளையும் மூடுவாராயினர், சிந்த மோதிடக்கருது மூர்க்கர்முன்-(ஸ்ரீசோலையசுவாமிகள் செய்வது அநீதி என்று நினைத்து அவர்திருமேனியினின்றும் இரத்தம்) சிந் தும்படி அடிக்கவேண்டுமென்றெண்ணிய (கொடிய) சண்டாள ருக்கு எதிரில், தீய பேய்கள் பூதங்கள்-கொடிய பைசாசங்களும் பூதகணங்களும், காவலா வந்தவாறு தோற்றியது-(அவருக்குப்) பாதுகாப்பாய் வந்த தன்மை காணப்பட்டது,. அவ்வேளையில்- அந்தச்சமயத்தில், வடமலைப்பெயர் மன்-வடமலையப்ப பிள்ளையன் என்னுந்திருப்பெயர் கொண்ட அரசனும், வந்தான்-(அவ்விடத் துக்குத் தற்செயலாய்) வந்து சேர்ந்தான். எ—று.

போ—ரை:—அவ்வளவு செய்கையோடு அவ்விடத்தை விட்டு நீங்காது, அந்த ஆழ்வார் திருநகரி ஆதிநாதப் பெருமாள் கோயிலி னுள்ளும் செல்ல விரும்பினர். அழகிய பெருங்கருணைக் கடவு ளாகிய ஸ்ரீ மகா விஷ்ணுவினுடைய திருத்தொண்டரில் அநேகர் அதனைக்கண்டு தமது சுவாமியினுடைய ஆலயம் ஆசௌசமாகிவிடு மென்று அச்சங்கொண்டு, அவ்வாலயத்தின் பல கதவுகளையும்

மூவோராயினர். ஸ்ரீ சோலைய சுவாமிகள் செய்வது அநீதி என்று நினைத்து அவர் திருமேனியினின்றும் இரத்தம் சிந்தும்படி அடிக்க வேண்டுமென்று எண்ணிய, கொடிய சண்டாளருக்கு எதிரில், கொடிய பைசாசங்களும் பூதகணங்களும் அவருக்குப் பாதுகாப்பாய் வந்த தன்மை காணப்பட்டது. அந்தச் சமயத்தில் வடமலையப்ப பிள்ளையன் என்னுந் திருப்பெயர் கொண்ட அரசனும் அவ்விடத்துக்குத் தற்செயலாய் வந்து சேர்ந்தான். எ—று.

அரோ அசைநிலை

பலோர் என்பது இடைக்குறை (கஉ)

அருள்வி நோதத்தான் மன்னங் கெய்தல்கண் டந்த
ணுளரஃ தோதி ஞரவ ன்
றெருளு மம்முனிக் கடிமை யாதலிற் றெண்ட
னிட்டிதேன் செய்தி யென்ற போ
திருளு முற்பவத் திவர்நெ றிக்கணுற் றியானி
சைத்தநூ லிதனுள் வைத்துளே ன்
பொருளின் மிக்கதா மதையெ டுத்திடப் போதல்
வேட்டனன் பொய்யன் றேயென்ருன். (கஙு)

இ-ள்:— அருள் விநோதத்தால்-(கடவுளினது) கிருபாமகத்துவத்தால், மன்-(வடமலையப்ப) அரசன், அங்கு எய்தல் கண்டு-அவ்விடத்தில் எழுந்தருளியதை யறிந்து, அந்தணுளர்-(அவ்வூர் வைஷ்ணவப்) பிராமணர், அஃது ஓதினர்-(அவ்வரசனைக் கண்டு) அங்கு நடந்த செய்கையை உரைத்தனர், அவன்-(அதனைக்கேட்டுணர்ந்த) அவ்வரசன், தெருளும் அம்முனிக்கு-(உண்மை நிலையில்) தெளிவடைந்த அந்த ஸ்ரீ சோலைய சுவாமிகளுக்கு, அடிமையாதலில்-சிஷ்யனுகையால், தெண்டனிட்டு-(அவருக்கு) வணக்கஞ் செய்து, இது என் செய்தி என்றபோது-இச்செயல் எதன் பொருட்டுச் செய்தீரென்று வினவிய அளவில், இருளும் முற்பவத்து-அஞ்ஞான மயக்கத்தோடு கூடிய முற்பிறப்பின் கண்ணே,

இவர் நெறிக்கண் உற்று-இப்பிராமணர்களால் அநுஷ்டிக்கப்பட்ட சமயத்தைச் சார்ந்து, யான் இசைத்தநூல்-(அக்காலத்து) யான் சொல்லிய சமய சாஸ்திரமொன்றை, இதனுள் வைத்துளேன்-இந்த ஆலயத்தினுள்ளே வைத்திருக்கின்றேன், பொருளில் மிக்கது ஆம்-(அந்நூல்) அர்த்தத்தில் உயர்வுடையதாம், அதை-அந்நூலை, எடுத்திட-(இப்போது) எடுக்கவேண்டுமென, போதல் வேட்டனன்-(இவ்வாலயத்தினுள்ளே) செல்ல விரும்பினேன், பொய் அன்று என்ருர்-(இது) சத்தியமென்று திருவாய் மலர்ந்தருளினர். எ—று.

போ—ரை:—கடவுளினது கிருபா மகத்துவத்தால் வடமலையப்ப அரசன் அவ்விடத்தில் எழுந்தருளியதை அறிந்து அவ்வூர் வைஷ்ணவப் பிராமணர் அவ்வரசனைக் கண்டு அங்கு நடந்த செய்கையை உரைத்தனர். அதனைக் கேட்டுணர்ந்த அவ்வரசன் உண்மை நிலைமையில் தெளிவடைந்த அந்த ஸ்ரீ சோலைய சுவாமிகளுக்குச் சிஷ்யனுகையால் அவருக்கு வணக்கஞ் செய்து இச்செயல் எதன் பொருட்டுச் செய்தீரென்று வினவிய அளவில் அஞ்ஞான மயக்கத்தோடு கூடிய முற்பிறப்பின்கண்ணே, இப்பிராமணர்களால் அநுஷ்டிக்கப்பட்ட சமயத்தைச் சார்ந்து அக்காலத்து யான் சொல்லிய சமய சாஸ்திரம் ஒன்றை இந்த ஆலயத்தின் உள்ளே வைத்திருக்கின்றேன் அந்நூல் அர்த்தத்தில் உயர்வுடையதாம். அந்நூலை இப்போது எடுக்க வேண்டுமென இவ்வாலயத்தின் உள்ளே செல்ல விரும்பினேன் இது சத்தியம் என்று திருவாய்மலர்ந்தருளினர். எ—று.

ஏ அசைநிலை (கரு)

அற்பு தத்ததா மச்சொற் கேட்டபோ தங்கு
ளார்மனத் தைய மெய்தியி . ச்
சொற்பொ யாகிலெம் முயிர்வி டுக்குவஞ் சொன்ன .
வண்ணமச் சுவடி நல்கின . ல்

நிற்ப ணிந்துநீ யேம யேசனு நிசமுள்
வேமென்றூர் நிருப னேடைக் கோ
யிற்பு குந்தோர்கற் கீழோர் பெட்டகத் திட்ட
வாறெடுத் தீந்திட் டானரோ. (கச)

இ—ள்:—அற்புதத்தது ஆம்-(யாவரும்) அதிசயிக்கத்தக்க தாகிய, அச்சொல் கேட்டபோது-அத்திருவாக்கைக் கேட்ட காலத்தில், அங்கு உளார்-அவ்விடத்திலுள்ளவர், மனத்து ஐயம் எய்தி-(தத்தம்) மனத்திற் சந்தேகங்கொண்டு, இச்சொல் பொய் ஆகில்-(சுவாமி இப்போது தாங்கள் கூறிய) இவ்வசனம் அசத்திய மாகுமானல், எம் உயிர் விடுக்குவம்-எங்களுடைய பிராணனை (நாங்களே) போக்கிக் கொள்வோம், சொன்ன வண்ணம்-(தாங்கள்) சொல்லியவாறு, அச்சுவடி நல்கினுல்-அச்சாஸ்திரத்தை (எடுத்து) அளிப்பீரானல், நிற்பணிந்து நீயே மயேசனு உள்வேம்-உம்மை வணங்கி உம்மையே மகேசுரனுக மதிப்போம், நிசம் என்றூர்-(இது) சத்தியம் என்று கூறினூர், நிருபனேடு அக்கோயில் புகுந்து-(உடனே ஸ்ரீ சோலைய சுவாமிகள்) வடமலையப்ப அரச னேடு அவ்வாலயத்தினுட் சென்று, ஓர் கற்கீழ் ஓர் பெட்டகத்து-ஒரு கல்லால் மூடிவைக்கப்பட்டிருந்த ஒரு பெட்டகத்தினுள், இட்டவாறு-(தாம் முற்பிறப்பில்) வைத்தபடியே, எடுத்து ஈந் திட்டான்-(அச்சாஸ்திரத்தை) எடுத்து (அரசன் கையிற்) கொடுத் தனர். எ—று.

பொ—ரை:—யாவரும் அதிசயிக்கத் தக்கதாகிய அத்திரு வாக்கைக் கேட்ட காலத்தில் அவ்விடத்தில் உள்ளவர் தத்தம் மனத்தில் சந்தேகங்கொண்டு சுவாமி இப்போது தாங்கள் கூறிய இவ்வசனம் அசத்திய மாகுமானல் எங்களுடைய பிராணனை நாங்களே போக்கிக் கொள்வோம். தாங்கள் சொல்லியவாறு அச் சாஸ்திரத்தை எடுத்து அளிப்பீராகில், உம்மை வணங்கி உம்மையே மகேசுரனுக மதிப்போம் இது சத்தியம் என்று கூறினூர். உடனே

ஸ்ரீ சோலைய சுவாமிகள் வடமலையப்ப அரசனோடு அவ்வாலயத்தினுள் சென்று ஒரு கல்லால் மூடி வைக்கப்பட்டிருந்த ஒரு பெட்டகத்தினுள் தாம் முற்பிறப்பில் வைத்தபடியே அச்சாஸ்திரத்தை எடுத்து அரசன் கையிற் கொடுத்தனர். எ—று.

நீயே என்பதிலுள்ள ஏகாரம் தேற்றப் பொருளில் வந்தது. உளார் என்பதும் பொயாகில் என்பதும் இடைக் குறைகள் அரோ அசைநிலை. (கச)

அந்த நூலின்பே ரறிய கிற்கிலே னகில
மீதறிந் தார்க ளியாவ ரோ
வந்த மன்னனுஞ் சிந்தை நொந்தபல் வைண
வக்குழாத் தினரு மின்புற்றார்
கந்தன் றாதைபோ னின்ற மாதவன் கடிதின்
மற்றொரூர் வயின டைந்தனன்
பிந்த வன்னவன் செய்த வாடல்கள் பேசு
வார்கள்பல் பெரியர் தாமுமே (கரு)

இ—ள்:—அந்தநூலின்பேர் - அச்சாஸ்திரத்தின் பெயரை, அறிய கிற்கிலேன்-(யான்) தெரிந்திலேன், அகிலமீது-இவ்வுலகின்கண், அறிந்தார்கள் யாவரோ-(அதன் பெயரைத்) தெரிந்தவர்கள் யாவரோ (அவரையும் யான் தெரிந்திலேன்), வந்த மன்னனும்-(அவ்விடத்து) எழுந்தருளிய வடமலையப்ப அரசனும், சிந்தை நொந்த-(அங்கு) மனக்கிலேசமடைந்த, பல் வைணவக் குழாத்தினரும்-வைஷ்ணவ சமூகத்தினர் பலரும், இன்புற்றார்-(முன்படைந்த துன்பத்தினின்றும் நீங்கி) மனமகிழ்ச்சியெய்தினர், கந்தன் தாதைபோல் நின்றமாதவன்-முருகக்கடவுளின் தந்தையாகிய சிவபெருமான் போல அவ்விடத்து நின்ற பெருந்தவத்தையுடைய ஸ்ரீ சோலைய சுவாமிகள், கடிதில்-வெகுவிரைவில், மற்றொரு ஊர்வயின் அடைந்தனன்-பிறிதோரூரின்கண் சென்றனர்,

பிந்த-(அதன்) பின்னர், அன்னவன் செய்த-(பற்பல இடங்களிலும்) அப்பெரியார் செய்தருளிய, ஆடல்கள்-(அற்புதத்) திருவிளையாடல்களை, பல்பெரியார் தாமும்-பல அறிஞர்களும், பேசுவார்கள்-(புகழ்ந்து) கூறுவார்கள். எ—று.

பொ—ரை:—அச்சாஸ்திரத்தின் பெயரை யான் தெரிந்திலேன் இவ்வுலகின்கண் அதன் பெயரைத் தெரிந்தவர்கள் யாவரோ அவரையும் யான் தெரிந்திலேன் அவ்விடத்து எழுந்தருளிய வடமலையப்ப அரசனும் அங்கு மனக் கிலேசம் அடைந்த வைஷ்ணவ சமூகத்தினர் பலரும் முன்பு அடைந்த துன்பத்தினின்றும் நீங்கி மனமகிழ்ச்சி எய்தினர். முருகக் கடவுளின் தந்தையாகிய சிவபெருமான்போல அவ்விடத்து நின்ற பெருந்தவத்தையுடைய ஸ்ரீ சோலைய சுவாமிகள் வெகு விரைவில் பிறிதோரூரின்கண், சென்றனர். அதன் பின்னர் பற்பல இடங்களிலும் அப்பெரியார் செய்தருளிய அற்புதத் திரு விளையாடல்களைப் பல அறிஞர்களும் புகழ்ந்து கூறுவார்கள். எ—று.

ஏ- அசைநிலை. (கரு)

நீடு நாளவண் டிரியு மாமுனி நிகம
வாகமச் சமர சம்பெற ப்
பாடு சச்சிதா னந்த மாலையின் பாடன்
முப்பதிப் படியி லுள்ள ன
ஓடும் வாசியைக் கொடுமு யன்றெலா வுலக
முந்தனு ளொளிர்த ரப்பல்சி த்
தாடு வார்கடம் மரபி லுள்ளவர்க் கார்வ
மிக்களித் திடுப வாகியே (கசு)

இ—ள்:—நீடுநாள்-நெடுநாளாக, அவண்-(தாமிரபருணி நதியின் சங்கமத்துக்கு ஸ்தானமாகிய கடல் தொடங்கி அந்நதியின் உற்பத்திக்கு ஸ்தானமாகிய பொதிகைமலை வரையுமுள்ள) அப்

பாண்டி நாட்டில், திரியும் மாமுனி-சஞ்சரிக்கின்ற பெருந்தவத்தினராகிய ஸ்ரீ சோலைய சுவாமிகள், பாடு சச்சிதானந்த மாலையின்-பாடியருளிய சச்சிதானந்த மாலை என்னும் நூலின் கண்ணுள்ள, முப்பது பாடல்-முப்பது(தமிழ்ச்) செய்யுட்களும், எலாவுலகமுந்தனுள் ஒளிர்தர-(✱ முமுக்ஷுக்கள் பிரபஞ்சவடிவமாகிய) எல்லா வுலகங்களுந்தமது சொரூபத்தின்கண் (✱✱ அத்தியாசமாக) விளங்கும்படி (காண்டற்கு ஏதுவாகிய), நிகமஆகம சமரசம் பெற-வேதாந்த சித்தாந்த சமரச சிவானுபூதியை (✱✱✱ இயமாதி யோகவாயிலாக) அடைதற்கேதுவாயும், ஓடும் வாசியைக் கொடு-(அகத்தினும் புறத்தினும் பிராண அபான வடிவாக மேலுங்கீழும்) ஓடிக்கொண்டிருக்கின்ற வாயுக்களைக் கொண்டு, முயன்று-(இரேசக பூரக கும்பகமென்னும் பிராணாயாம) அப்பியாசஞ் செய்து (அவ்வப்பியாச வலியால் உளதாகும்மனோலயத்தால்), பல்சித்து ஆடுவார்கள் தம்மரபில் உள்ளவர்க்கு - அணிமா முதலிய எட்டுச் சித்திகளையுஞ்செய்து விளையாடுகின்றவர்களது பரம்பரையிலுள்ளவர்களுக்கு, மிக்கு ஆர்வம் அளித்திடுப ஆகி-மிகுந்த பிரியத்தைக் கொடுப்பனவாயும், இப்படியில் உள்ளன-இவ்வுலகின்கண் விளங்கியுள்ளன. எ—று.

போ—ரை:—நெடுநாளாகத் தாமிரபருணி நதியின் சங்கமத்துக்கு ஸ்தானமாகிய கடல் தொடங்கி அந்நதியின் உற்பத்திக்கு ஸ்தானமாகிய பொதிகைமலை வரையுமுள்ள அப்பாண்டி நாட்டில்

✱ முமுக்ஷுக்கள்-முத்திவிருப்ப முடையவர்.

✱✱ அத்தியாசம்-கற்பனை.

✱✱✱ இயமாதி யோகங்களாவன-இயமம், நியமம், ஆதனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்பனவாம். இவற்றுள்

(1) இயமமாவது கொல்லாமை, மெய்ம்மை கூறல், கள்ளாமை, பிறர் பொருள் விழையாமை, இந்திரிய மடக்கல் என்பனவாம்.

சஞ்சரிக்கின்ற பெருந்தவத்தினராகிய ஸ்ரீ சோலைய சுவாமிகள் பாடியருளிய சச்சிதானந்த மாலையென்னும் நூலின் கண்ணுள்ள மூப்பது தமிழ்ச் செய்யுட்களும் முமுக்ஷுக்கள் பிரபஞ்ச வடிவமாகிய எல்லாவுலகங்களுந் தமது சொரூபத்தின்கண் அத்தியாசமாக விளங்கும்படி காண்டற்கு எதுவாகிய வேதாந்த சித்தாந்த சமரச சிவானுபூதியை இயமாதி யோக வாயிலாக அடைதற்கு எதுவாயும் அகத்தினும் புறத்தினும் பிராணபான வடிவாக மேலுங் கீழும் ஓடிக்கொண்டிருக்கின்ற வாயுக்களைக் கொண்டு இரேசக

---

(2) நியமமாவது தவம், சுத்தமுடைமை, தத்துவ நூல் ஓர்தல், பெற்றது கொண்டு மகிழ்தல், தெய்வம் வழிபடல் என்பனவாம்.

(3) ஆதனமாவது பத்திரம், கோமுகம், பங்கயம், கேசரி, சுவத்திகம், சுகாதனம், வீரம், மயூரம் முதலிய இருப்பினுள் ஒன்றுயிருத்தல்.

(4) பிராணயாம மாவது பிராணவாயு வைத்தடுத்தல், இரேச்க பூரக கும்பகங்களால் தடுத்தல், இரேசகம் என்பது மூச்சை விடுக்குதல், பூரகம் என்பது வாயுவை உட்செலுத்துதல் கும்பகம் என்பது அங்ஙன் ஏற்றிய வாயுவை நிறுத்தல் இது அகற்பம் சகற்பம் என இருவகைப்படும் மந்திர மில்லாது நிறுத்தல் அகற்பம், பிரணவத்துடன் காயத்திரி மந்திரத்தையும், உச்சரித்துநிறுத்தல் சகற்பமாம்.

(5) பிரத்தியாகாரமாவது மனமானது இந்திரிய வாயிலாக விடயாதிகளில் சென்று பற்றி உழலாவண்ணம் அடக்குதலாம் எனவே சீவ உபாதியை நீக்கிப் பிரபஞ்ச உபாதியைச் சிவசொரூபமாகப் பார்த்தல்.

பூரக கும்பகமென்னும் பிராணுயாம அப்பியாசஞ்செய்து அவ்வப்பி யாச வலியால் உளதாகும் மனோலயத்தால் அணிமா முதலிய எட்டுச் சித்திகளையுஞ் செய்து விளையாடுகின்றவர்களது பரம் பரையில் உள்ளவர்களுக்கு மிகுந்த பிரியத்தைக் கொடுப்பனவா யும் இல்வுலகின்கண் விளங்கியுள்ளன. எ—று.

ஏ. அசைநிலை எலா என்பதும் தனுள் என்பதும் இடைக்குறைகள்.

அணிமா முதலிய எட்டுச்சித்திகளாவன.... அணிமா, மகிமா, கரிமா, லகிமா, பிராத்தி, பிராகாமியம், ஈசத்து வம், வசித்துவம் என்பனவாம்.

---

(6) தாரணையாவது உந்தி, இதயம், உச்சி என்னும் மூன்றிடத்தும் சித்தத்தை நிலைநிறுத்தல். இதுவன்றி முழங்கால், குதம், இதயம், கண்டம், கபாலமென்னும் ஐந்து இடங்களிலும் பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகா யம் என்னும் பஞ்சபூதங்களையும் ஒடுக்கி அவ்விடங்களில் முறையே பிரமன், விஷ்ணு, உருத்திரன், மகேசுரன் சதா சிவன்என்னும் பஞ்சமூர்த்திகளையும் இருத்திப் பாவித்தலா மென்றுங் கூறுவர்.

(7) தியானமாவது ஐம்புலத்தையும் அந்தக்கரணத் தையும் அடக்கி ஒருகரத்து மழுவும் ஒருகரத்துமானும் ஏந்தியதாய் அபய வரத அத்தங்களை யுடையதாய் சதுர்ப் புஜம் காளகண்டம் திரிநேத்திரம் உடையதாய் விளங்குஞ் சிவமூர்த்தியைத் தியானித்தலாம்.

(8) சமாதியாவது ஓரிடத்தேனும் மந்திரத்தோடு நோக்காமல் எங்கணுஞ் சிவவியாபகமாய் நோக்கி அவ்வஸ்து வையுந் தன்னையும் பிரிவறப் பொருந்தல். இவற்றின் விரிவுகளை எல்லாம் கூர்மமகாபுராணம் சூதசங்கிதை. வாயு சங்கிதை முதலிய முன்னூல்களில் காண்க.

மிகச் சிறிய வுருவினை யுடையதாதல் அணிமாவென வும் மிகப்பெரிய உருவினை யுடையதாதல் மகிமாவெனவும் மிகக் கனத்திருத்தல் கரிமாவெனவும் துரும்பைப் போன்று கனமின்றி மிக நொய்தாயிருத்தல் லகிமா வென வும் விரும்பியதை விரும்பியவாறு அடைதல் பிராத்தியென வும் பரகாயப் பிரவேசஞ் செய்தல் ஆகாய கமனம் புரிதல் இச்சித்த சர்வ போகங்களும் இருந்த விடத்திற் பெறுதல் சூரிய வொளியால் பொருள்களைக் காணுமாறு போன்று தனது உடலொளியால் பொருள்களைக் காண்டல் திரிகால வுணர்ச்சி பிராகாமிய மெனவும் எத்தகையோர்க்கும் மேற் பட்டிருத்தல் ஈசத்துவ மெனவும் சராசரப் பொருள்கள் யாவற்றையும் தன்வசமாக்கல் வசித்துவமெனவும் அறிக என்பார் "பல்சித்து" என்றூர். இவற்றின் விரிவைத் திருவிளையாடற் புராணம் அட்டமா சித்தி யுபதேசித்த படலத்திற் காண்க.

எப்போதுவென்றூன் என்னுங் கிராமத்திலுள்ள ஸ்ரீ சோலையசுவாமிகள் ஆலயத்தில் இவர் திருவாய்மலர்ந்தரு ளிய விபரமாலை, அறிவுவிளக்கம், நடுவணையலங்காரம், பள், குறவஞ்சி முதலிய சில ஞானநூல்கள் ஏட்டுப் பிரதிகளில் உள்ளன எனவும் அறிக.

சச்சிதானந்த மாலை முமுக்ஷுக்கள் வேதாந்த சித் தாந்த சமரச சிவானுபூதியை இயமாதி யோக வாயிலாகப் பெறுதற்குக் காரணமாயும் எண்வகைச் சித்தியுடை யோர்க்கு மிகுந்த பிரியத்தைத் தருவதாயும் விளங்கியுள்ளது என்பதைக் கருத்தாகக் கொள்க. (கசு)

அவன தாமுடற் போன வாறிதென் றறியொ
ணாதெனப் பலர்சொல் வார்சிலோ ர்
தவவி சேடநிட் டையி லிருக்கையிற் றழலி
டைப்பொலார் தாம ழுத்தலா ற்
சவமெ னக்கழுத் தளவும் வெந்துநற் றலைப
றந்துபோய்த் தன்னொர் சீடன்முன்
னுவகை யோடுசிற் சிலமொ ழிந்துபே
ரொளியி லுற்றதென் றோது வார்களே (கஎ)

இ—ள்:—அவனது உடல்-ஸ்ரீசோலைய சுவாமிகளுடைய திருமேனியானது, போனவாறு இது என்று-(இறுதியில்) மறைந்தது இவ்விதமென்று, அறியொணாது (ஆம்) என-தெரிந்து கொள்ளக் கூடாததாமென்று, பலர்சொல்வார் - அநேகர்கூறுவர், தவவிசேட நிட்டையில் இருக்கையில்-(இந்திரிய நிக்கிரக முதலிய) தவத்தின் வலியால் ஞானநிஷ்டை கூடியிருந்த காலத்தில், பொலார்-சிலதீயவர்,தழலிடை அழுத்தலால்-(அவருடைய ஜீவோபாதியாகிய திருமேனியை) அக்கினியின்கண் மூழ்கச் செய்த படியால், கழுத்து அளவும் சவமென வெந்து-(பாதமுதல்) கழுத்து வரையுமுள்ள சரீரம் பிணம்போல வேக, நல்தலை-(மிஞ்சியுள்ள ஜீவோபாதியாகிய அவயவங்களிற்)சிறந்ததலையொன்று மாத்திரம், பறந்து-ஆகாயமார்க்கமாய்ச் சென்று, தன்னொர் சீடன் முன் போய்-தன்னுடைய ஒரு சீடனுக்கெதிரே நின்று, உவகையோடு-(மிகக்) களிப்புடன், சிற்சில மொழிந்து-சிற் சில வசனங்களைச் சொல்லி, பேரொளியில் - (ஸ்ரீசோலையசுவாமிகளது தலையை உபாதியாகவுடைய ஆன்மாதலையினின்றும் நீங்கிப்) பேரொளிப் பிழம்பாகிய சச்சிதானந்த சொருபத்தில், உற்றது என்று-கலந்ததென்றும், சிலோர்-சிலமாந்தர்கள், ஓதுவார்கள்-சொல்லுவார்கள். எ—று.

பொ—ரை:—ஸ்ரீசோலையசுவாமிகளுடைய திருமேனியானது இறுதியில் மறைந்தது இவ்விதமென்று தெரிந்து கொள்ளக் கூடாததாமென்று, அநேகர் கூறுவர். இந்திரிய நிக்கிரக முதலிய

தவத்தின் வலியால் ஞான நிஷ்டை கூடியிருந்த காலத்தில் சில தீயவர் அவருடைய ஜீவோபாதியாகிய திருமேனியை அக்கினி யின்கண் மூழ்கச் செய்தபடியால் பாதமுதல் கழுத்துவரையும் உள்ள சரீரம் பிணம் போல வேக, மிஞ்சியுள்ள ஜீவோபாதியாகிய அவயவங்களிற் சிறந்த தலை ஒன்றுமாத்திரம் ஆகாய மார்க்கமாய்ச் சென்று தன்னுடைய ஒரு சிஷனுக்கு எதிரே நின்று மிகக் களிப்புடன் சிற்சில வசனங்களைச் சொல்லி ஸ்ரீசோலையசுவாமிகளது தலையை உபாதியாக வுடைய ஆன்மா தலையினின்றும் நீங்கிப் பேரொளிப் பிழம்பாகிய சச்சிதானந்த சொரூபத்திற் கலந்த தென்றும் சில மாந்தர்கள் சொல்லுவார்கள். எ—று.

தாம். ஏ. அசைநிலை. வெந்து என்பது செயவெனெச் திரிபு, ஒணுது, சிலோர், பொலார் என்பவை இடைக்குறைகள். ஆக்கச் சொல் பிரித்துக் கூட்டப்பட்டது. (கஎ)

உள்ள தாயவப் பனுவ லொன்றுமுன் னுடலொ
டுற்றபோ தோத லென்றும் பின்
எள்ள றீர்தரத் தலைத னித்தபோ தியம்ப
லென்று மோ துனரு மிங்குளார்
வள்ள லாமரன் றிருவ ருட்பெரு வாழ்வுஞ்
செந்தமிழ் வளமுந் தோய்ந்ததிற்
கள்ள மின்மையா லிதனி லத்தவன் கதையு
ரைத்ததாங் கண்டு கொண்மினே (கஅ)

இ-ள்:—உள்ளதாய - (ஸ்ரீசோலையசுவாமிகள் பாடியருளிய அளவற்றதிருப்பாடல்களில் இவ்வுலகின்கண் விளங்கி) யுள்ளதாகிய, அப்பனுவல் ஒன்று-அந்தச் சச்சிதானந்த மாலை யென்னும் நூலொன்றை, முன் உடலொடு உற்றபோது ஓதல் என்றும்-முன் சரீரத்தோடு கூடிய காலத்தில் அருளிச்செய்யப்பட்டதென் றும், எள்ளல்தீர்தர- (பிணமென்று அக்கினியாற் கொளுத்தப்

பட்ட) இழிவு தீரும்படி, தலை தனித்தபின்போது இயம்பல் என்றும்-(அக்கினியாற் கொளுத்தப்பட்ட சரீரத்தினின்றும் நீங்கிய) தலைதனித்த பிற்காலத்தில் அருளிச் செய்யப்பட்டதென்றும், ஓதுனரும் இங்கு உளார் - கூறுகின்ற இருவகுப்பினரும் இவ்வுலகின்கண் உண்டு, வள்ளலாம் அரன் - (அடியார்க்கிரங்கி அருள்புரியும்) வள்ளலாகிய சிவபெருமானது, திருவருள் பெருவாழ்வும் - திருவருள் வடிவாகிய மகத்துவமுடைய ஞானச்செல்வத்தையும், செந்தமிழ் வளமும்-இயற்றமிழ்க் கல்விச்செல்வத்தையும், தோய்ந்ததில்-அவரடைந்ததில், கள்ளம் இன்மையால்-(சிறிதும்) பொய்யில்லாதபடியால், இதனில்-இப்புலவர் புராணத்தில், அத்தவன் - அந்த ஸ்ரீசோலையசுவாமிகளுடைய, கதை-சரிதத்தை, உரைத்தது ஆம்-சொல்லப்பட்டதாம், கண்டு கொண்மின்-(இதனை) ஆராய்ந்து அறிந்து கொள்ளுங்கள். எ—று.

போ—ரை:—ஸ்ரீசோலையசுவாமிகள் பாடியருளிய அளவற்ற திருப்பாடல்களில் இவ்வுலகின்கண் விளங்கியுள்ளதாகிய அந்தச் சச்சிதானந்த மாலை என்னும் நூலொன்றை முன்சரீரத்தோடு கூடியகாலத்தில் அருளிச்செய்யப் பட்டதென்றும் பிணமென்று அக்கினியாற் கொளுத்தப்பட்ட இழிவு தீரும்படி அக்கினியாற் கொளுத்தப்பட்ட சரீரத்தினின்றும் நீங்கிய தலைதனித்த பிற்காலத்தில் அருளிச்செய்யப்பட்டதென்றும் கூறுகின்ற இருவகுப்பினரும் இவ்வுலகின்கண் உண்டு அடியார்க்கு இரங்கி அருள்புரியும் வள்ளலாகிய சிவபெருமானது திருவருள் வடிவாகிய மகத்துவமுடைய ஞானச் செல்வத்தையும், இயற்றமிழ்க் கல்விச் செல்வத்தையும் அவர் அடைந்ததிற் சிறிதும் பொய்யில்லாதபடியால், இப்புலவர்புராணத்தில் அந்த ஸ்ரீ சோலைய சுவாமிகளுடைய சரிதத்தைச் சொல்லப்பட்டதாம் இதனை ஆராய்ந்து அறிந்து கொள்ளுங்கள். எ—று.

ஏ அசைநிலை உளார் என்பது இடைக்குறை. (கஅ)

ஆயும் வண்புகழ்ச் சோலை யன்றிறத் தடிய
னேனறிந் திட்ட மட்டினி ற்
றோயும் வண்சுவைக் கவிக ளாலிவண் சொல்லி
னேனினிச் சுரமி னூர்வன ப்
பேயு மாதரண் மனையி னிற்புணர்ந் திடுத
னட்டபோ திசைவு றுதுபோ ந்
தாயு மானவன் சரித மிச்சகந் தனினு
ணர்ந்தவா சாற்று கேனரோ (கசு)

இ—ள்:—ஆயும்-ஆராயப்படுகின்ற, வண்புகழ் - மெய்ம்மையாகிய கீர்த்தியினையுடைய, சோலையன் திறத்து-ஸ்ரீசோலைய சுவாமிகளது சரித்திரவகையில், அடியனேன்-அவரது தொண்டனாகிய யான், அறிந்திட்டமட்டினில் - தெரிந்த வளவில், வண்சுவை தோயும் - தகுந்த சொற்சுவை பொருட்சுவைகலந்த, கவிகளால்-பாக்களால், இவண்-இப்புலவர் புராணத்தின் (42) நாற்பத்திரண்டாவது சருக்கத்தில், சொல்லினேன்-பாடிமுடித்தேன், இனி-அடுத்த சருக்கத்தில், சுரமினூர் வனப்பு ஏயும்-(மேனகை, அரம்பை, ஊர்வசி, திலோத்தமை முதலிய,) தெய்வப்பெண்கள் போலும் அழகுபொருந்திய, மாது-ஓரரசன் மனைவி, அரண்மனையினில்-(தனது) மாளிகையில், புணர்ந்திடுதல் நட்டபோது-புணர்ச்சியை விரும்பிய சமயத்தில், இசைவு உறுதுபோம்-(அதற்குச்) சம்மதமின்றிப் போன, தாயுமானவன் சரிதம் - ஸ்ரீதாயுமான சுவாமிகளுடைய சரித்திரத்தை, இச்சகந்தனில்-இப்பூமியின்கண், உணர்ந்தவா - (யான்) அறிந்த அளவில், சாற்றுகேன் - பாடத்தொடங்கினேன். எ—று.

பொ—ரை:—ஆராயப்படுகின்ற மெய்ம்மையாகிய கீர்த்தியினையுடைய ஸ்ரீசோலைய சுவாமிகளது சரித்திர வகையில் அவரது தொண்டனாகியயான்தெரிந்த வளவில் தகுந்த சொற்சுவை

பொருட்சுவை கலந்த பாக்களால் இப்புலவர் புராணத்தின் (42) நாற்பத்திரண்டாவது சருக்கத்தில் பாடிமுடித்தேன் அடுத்த சருக்கத்தில் மேனகை, அரம்பை, ஊர்வசி, திலோத்தமை முதலிய தெய்வப் பெண்கள் போலும் அழகுபொருந்திய ஓரரசன் மனைவி தனது மாளிகையில் புணர்ச்சியை விரும்பிய சமயத்தில் அதற்குச் சம்மதமின்றிப் போன ஸ்ரீதாயுமானசுவாமிகளுடைய சரித்திரத்தை இப்பூமியின்கண் யான் அறிந்த அளவில் பாடத்தொடங்னேன். எ—று.

மினூர் என்பது இடைக்குறை. அரோ. அசைநிலை.

உரை வாழ்த்து.

வானநன் மாரி பெய்க மகிபல வளங்க ணல்க
ஈனமி லரசன் செங்கோ லெழில்பெற விளங்கி யோங்க
ஞானமு மறனு மெய்யு நலன்றரு பிறவு மெய்தி
மானவ ரெவரும் வாழ்க மன்னுபல் லுயிரும் வாழ்க

தத்துவ முணர்ந்த சோலை மாமுனி சரணம் வாழ்க
புத்தமிழ் தனைய வன்னோன் புராணமு மினிது வாழ்க
பத்தியா லிதனை நாளும் படிப்பவர் கேட்போ ரெல்லாஞ்
சத்திய ஞான னந்தத் தனிப்பதஞ் சார்ந்து வாழ்க

ஸ்ரீ சோலையசுவாமிகள் சரித்திராமிருதம்
மூலமும், உரையும்

முற்றுப்பெற்றன.

உ

ஓம் தத் சத்.

பரப் பிரஹ்மணே நம:

ஸ்ரீசோலைய சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய

ச ச் சி தா ன ந் த மா லை.

மங்கலம்.

முச்சுட ராகி யொன்ருய் முடிந்ததோர் சோதி பாதம்
அச்சுத னயனுங் காணு வகண்டமா யளவி லாத
சச்சிதா னந்த ஞான சதாசிவ குருவைப் பா ட
மெய்ச்சுட ருதயமான விளக்கொளி யுண்மைசெய்வாம்

கண் ணுக்குண் மணியாய் நின்ற காரண குருவைப் போற்றி
விண் ணுக்கு ளொளியைப் பார்த்து மெய்ப்பொருள்விளக்க மாக
மண் ணுக்கு ளெவர்க்கு ஞான வழிதனை யுணர்ந்தோர்க் கெல்லாம்
ஒண் ணுக்கு ளொன்ருய் நின்ற வுண்மையை யுரைக்க லுற்றேன்

நூல்

முத்தமாய் நின்றபர நாதவெளி கீதமொரு முச்சந்தி வீதி நடுவின், மும்மல மகற்றிவெளி நிர்மல சொரூப மாய் முச்சுடரி னுச்சி முடிவில், உத்தமா தேசிபரி சுத்

தமா யஷ்டதிசை யூடாடி வெட்ட வெளியில், ஒளியாகி விரிசுடரி னுதயகிரி முனையிலே யொருநாலு மிருநாலுடன், நித்தமாய் நின்றபரி பூரண சதாசிவ நிலைகொண்ட சோதி மயமே, நின்மகிமை கண்டுளே தெண்டனிடு தொண்டர் தம் நினைவுசற் றயரா மலே, சத்தமா நின்றமணி ரத்ன வொளி தீபமே தரல் வேண்டு மிதுச மயமே, தற்பரா னந்தசபை நிஷ்களா னந்த சிவ சச்சிதா னந்த குருவே (க)

பொற்பிரபை யாகியொரு வச்ரமலை யுச்சியிற் புன்னை மலரன்ன மலரோ,பூத்தமலர் வாசனையி னுற்றமலரூறுதேன் புன்னுனியின் மணிபோலவே, நற்பவள மலையிலே யுற்பனம தாகவே நவில்கின்ற நாத குருவே, நாசாய ணயநம வேதா வினோதநம நந்திசிவ சாம்ப சிவனே, சொற்பொருளி லாத தோர் கற்படிக ரூபமாய்த் துய்யமதி யாகி வெளியில், துரிய முத லாகாய வழிசிகர மணியோசை சொல்விம்மி நின்ற பரமே, தற்புருஷ நிலையிலே விற்புருவ நடுவிலே தாபித்த சீர்பா தமே, தற்பரா னந்தசபை நிஷ்களா னந்தசிவ சச்சிதா னந்த குருவே (உ)

ஒட்டாது பாசவினை எந்நாளு மின்னார்கள் யோனிசிறு கேணியளறில், உழல்கின்ற பாவமோ வெறிகொண்ட நிர் மூட ருடல் கெட்டு முறிபட் டபின், கிட்டா தருந்தவசு முற்றுதி றங்குதுறை கேடுளவு வெகுதூ ரமாய்க், கேசாதி பாதமல ரீராறு கால்கொண்டு கீழ்மேலு மாராய்ந் துபார், எட்டாது வெட்டவெளி கொட்டாவி யிட்டுகழி யிடுகாடு சுடுபொட் டலாய், ஏகமொரு காலமழி யாதமன ஜோதி யொளி எல்லைநிலை சொல்ல வெளிதோ, தட்டாது நிஷ்டை யிலு மொட்டாத வட்டமே தரல்வேண்டு மிதுச மயமே, தற்பரா னந்தசபை நிஷ்களா னந்தசிவ சச்சிதா னந்த குருவே (௩)

முற்றுமோ முத்திபெற வைக்குமோ சித்தமது முப் பாழின் முப்ப தியின்மேல், மூதண்ட கூடமுக டாய்நின்ற நாதமே முனைசுழியி லணுவா கியே, வத்துவாய் வித்தி லொரு சித்தாகி ரத்னமணி வந்தசிறு வாசல் வழியே, மடைவாயில் பக்ஷிபோ னடைபார்த் திராதுநீ மற்றென்ன கற்ற றிவையோ, சுத்தமாய்த் தூலவுடல் வைத்தசீர் பாத மது சூக்ஷ்மாதி சூக்ஷ்ம நடனம், தொண்டரிரு கண்கள் விழி கொண்டழகு கண்டபின் சொல்லேது பொருளேது காண், சற்றுமோ கிட்டவிலை நெற்றிநே ரிட்டசுழி தரல் வேண்டு மிதுச மயமே, தற்பரா னந்தசபை நிஷ்களா னந்தசிவ சச்சிதா னந்த குருவே (ச)

முக்கோண வட்டமொரு சிறுவீடு கட்டியதின் முன் னின்ற சோதி வெளியின், முத்திசிவ சத்தியாய் மத்யமதி யத்திலே முதலெழுத் தூன்றி நடுவே, உட்கோண வளைய மாய் நாற்கோண வீதிலே உசுவாச நிசுவா சமாய், ஊமை யுயி ராகமதி லாமையுரு வாகியே யுண்மைகுரு வேடு வனு மாய், அக்கோண வீதிமுத லாகாச மெனமூல மாதார பாத கமலம், ஆணிநடு மேருகிரி யூடுநடு முடிவிலே யஷ்டா க்ஷரத்துள் விரிவாய், சட்கோண முற்றவெளி யப்பா லிருந்தபதி தரல்வேண்டு மிதுச மயமே, தற்பரா னந்த சபை நிஷ்களா னந்தசிவ சச்சிதா னந்த குருவே (ரு)

மூலமணி பூரகம ஞகதம் விசுத்தியின் மூவிரண் டாறு மனையாய். முச்சந்தி வீதிநக ருச்சம் பளீரென்று மூடு திரை யாகு மதிலே, கோலமணி நாராச மேலையொடு சிறு வாசல் கோழையறல் வேண்டு மனமே, கோடிபல நூலறிவு வேதமுறை பேசினுங் குருபாதம் வெளியா குமோ. நீல

மணி யாபரண வாலகுரு சாமியார் நின்றநிலை கண்ட தெவரோ, நேமிசிவ காமிசரு வேசரிரு தாளெனது நேராக நெஞ்சி னடுவே, சாலமெனு மாமோக வேலையற வேஞான சாயுச்ய பதம ருளுவாய், தற்பரா னந்தசபை நிஷ்களா னந்த சிவ சச்சிதா னந்த குருவே (சு)

சுந்தர சௌந்தர நிறைந்தபரி பூரண சுயம்புப்ர காச வெளியில், சுத்தமய படிகமய நித்யநவ ரத்னமாய்த் தூண்டாத தீப வொளியாய், மந்திர சடாக்ஷர விலட்சண முதற்செயல் வச்ரமய தற்சொ ருபமாய், மகேசுர சதாசிவ சிதம்பர திகம்பர மனோன்மய சிரோம ணியனே, அந்த ணர் புரந்தரா னந்தருஷி யும்பரு மநேகசிவ யோக வருளே, ஆகம புராணகலை யோதிய தபோதனர்க ளடிதொழுது கதிய டையவே, சந்தன சுகந்தரச கந்தமர விந்தமதி தரல்வேண்டு மிதுச மயமே, தற்பரா னந்தசபை நிஷ்களா னந்தசிவ சச்சிதா னந்த குருவே (எ)

அன்னமய தூலமா யுண்மையுயி ராகமா யநுபோக வநுக ரணமாய், அறிவுதரு முபதேச குருநமசி வாயமா யடிமைகுடி கொண்ட பரனே, மன்னமல பேதவகை தன்னிலுழ லாமலே மருவியிரு பாத மருள்வாய், மதுர ரச கருணைமல ரொழுகுதிரு கனகசபை வடிவாகி யென்ற னுளமே, சொன்னமய மாகவளர் விண்ணினொளி தானான சோதிமதி யாதி பதியே, சுக்கில சுரோணித வகைக் கொரு விதக்கருவி தோன்றுவது நீயா கையால், சன்னமய மாகவரு மின்னினொளியேயறிவு தரல்வேண்டு மிதுச மயமே, தற்பரா னந்தசபை நிஷ்களா னந்தசிவ சச்சிதா னந்த குருவே (அ)

அம்பரவி லாசமா யின்பரச யோகமா யண்டபகி ரண்ட வெளியாய், அண்டநவ கண்டமா யெண்டிசை யநேகமா யளவாகி நின்ற பொருளாய்ப், பம்பரமி தேதுசட சங் களவி சாரநவ பஞ்சவன மஞ்சு தொழிலாய்ப், பழவினையி னுலெனது கடமெனவி நோதவகை பகருமொரு பரம வணுவே, உம்பரறி யாதபதி செம்பவள வரையிலே யூன்றுதலை யாரு மறியார், ஓம்நமசி வாயசிவ ஞானகுரு தேசிகா உண்மைகுடி கொண்ட வடிவே, தம்பரம தாகிய சிதம்பர விலாசமே தரல்வேண்டு மிதுச மயமே, தற்பரா னந்தசபை நிஷ்களா னந்தசிவ சச்சிதா னந்த குருவே (கூ)

விரிகின்ற கருணைமல ருறைகின்ற சிவசோதி விட்ட குறை தொட்ட தெனவே, விதிவிகித மிதுவென்று மித மகித மறியாத விண்ணிஞெளி கண்ணி னளவாய்த், தெரி கின்ற தொருசிந்தை யறிகின்ற தறிவென்று தெரியாத விழிகு ருடரே, தினையளவு நினைவுசற் றயராம லங்ஙனே தீபவொளி காண வெளிதோ, எரிகும்பி மலமாயை யறை தங்கி வருபாச மிதுவெந்து பொடியா கவே, இடியேறு தொனியோசை யடிமூல முடிநாடி யேகாந்த வெட்ட வெளி யில், சரியென்று நிலைநின்று பரிகொண்டு பெறுசிந்தை தரல்வேண்டு மிதுச மயமே, தற்பரா னந்தசபை நிஷ்களா னந்தசிவ சச்சிதா னந்த குருவே (ய)

செக்கரிள மதிவதன மிக்கதிரு முககமல சிவகாமி யுடனே சனே, சித்திதரு வாயுனது முத்திபுரி வாயெனது சிவஞான குருதே சிகா, சொக்கமக மேருகிரி யுக்ரநடு வாகியே தூணுகி நின்ற நடனம், சோதிமன மாகியொரு நாதவெளி கீதமே தோன்றுவது பாத கமலம், மெய்க் கருணை பெருகிரச வர்க்கமல ரொழுகுதேன் வெய்யசிவ

தூய்ய கனியே,விட்டகுறை யனுபோக மொட்டதிரு வெட்டிலே விரிசத்தி புரியக் கர, சக்கரமு மீராறு நிற்கவொரு மிக்கவே தரல்வேண்டு மிதுசமயமே, தற்பரா னந்தசபை நிஷ்களா னந்தசிவ சச்சிதா னந்த குருவே (கக)

கொள்ளிக்கு விள்ளாத கூரிருளி லாகாயங் குறையுமோ வெளிம றையுமோ, கூழுண்ட ப்ர்ண்டமிது நாளுண்டு போவதோர் கூற்றனுயி ருற்ற மனமே, வெள்ளிக் குயர்ந்த மதி வெண்ணிலவு தோன்றவே வெளியாகி வழிகா ணவும், விவரமிது தெளியாத கவலைகுடி கொண்டதொரு வீணன காய மதிலே, துள்ளிமுத் திரிகரண கள்ளப் புலன்பொறிக டுண்டகண் டிதமா கவே, தொந்தவினை தந்தவுடல் சுட்டுவிட வெட்டவெளி தொக்குநிலை யொக்கு மலையைத், தள்ளிச் சிறைக்குடிலை மெள்ளத் திறந்துசெயல் தரல் வேண்டு மிதுச மயமே, தற்பரா னந்தசபை நிஷ்களா னந்தசிவ சச்சிதா னந்த குருவே (கஉ)

கட்டாத காளைதெரு விட்டோடி மீளவது கண்டுகொள் ளாத விதமோ, கவலைமறை விரிகொம்பு சிவலைமாக் காளை வெகு கடினமது பிடிபடாது, தொட்டாலு முட்டுமது கிட்டவர வொட்டாது சுழிபேத முனைகூர் மையாம், சூக்ஷமிகு கால்கொம்பு பாய்ச்சலது பாயாமல் துவாதசாந் தத்து வெளியில், மட்டாக நிட்டைமுறை கட்டுதுறை கிட்டுவது வரிகயிறு புரியெட் டினல், வையாளி பாயாம லுய்யவே விட்டுவிட வையதே மெய்யு மிதுவே, தட்டாமல் தட்டிவரு காளையது பாயாமல் தற்காத்து ரக்ஷிசமயம், தற்பரா னந்தசபை நிஷ்களா னந்தசிவ சச்சிதா னந்த குருவே (கங)

ஆடல்புரி நடனவிரு பாதபங் கயவேத மவதான சிவகோ ணமாம், அருமறையி லெட்டாத திருநடன விஸ்

தார மானதொரு பானு மதியே, கூடவொரு திரிகோண வீடுதரு நவகோண கோணமிசை திசைநா லுமே, கோதைய பி ராமியிரு பாதவொலி நாதமே கோடான கோடி நடனம், பாடலனு கீதசபை யோகசிவ ரேகைவெளி பரமாய சத்தி வடிவே, பாரமக மேருகிரி யூடுருவி மேலான பாலனைய பாத கமலம், சாடவனு போகசெய லோகமுத லாகவே தரல்வேண்டு மிதுச மயமே, தற்பரா னந்தசபை நிஷ்களா னந்தசிவ சச்சிதா னந்த குருவே (கச)

திருமருவு சோதியாய்ப் பிரபையொளி வீசியே தெரு விலொரு பாதையதிலே, திரிகரண சுத்தியா யமுதகலை சத்திலே தேனமுத மூறு சுனைநீர், வருமொருவர் காணவே திருகுசுழி கேணியில் வரவுசிறு வாச றெளிவு, மயிர்ப்பால மீதினி னெருப்பாறு தாவியே வந்தவழி கண்ட தெவரோ, அருவுருவி லாகாச மிருசரண கீதமே யநேகசிவ கோடி நடனம், அபயவர முதவுசிவ சமயகுரு நாதனே யத்துவித முத்தி பெறவே, தருமவுன சுழிமுனையி லணுவளவு கவ னமே தரல்வேண்டு மிதுச மயமே, தற்பரா னந்தசபை நிஷ்களா னந்தசிவ சச்சிதா னந்த குருவே (கரு)

முத்தரடி பாவுமிரு கமலபத மிதுவென்று முன் னின்ற ஞான குருவே, முனையாகி மூலமொரு தலையாகி வெளியிலே முனையாகி யேக விரிவாய்ப், பித்தரொரு மித்த விதி சற்றுமடை வார்களோ பெருமையது சிறுமை யதுவே, பேசா திருந்தசெய லாசா னிருந்தபதி பேருருக் காண வெளிதோ, பத்தரடி பணிவிடைகளெத்தனை யநேக சிவ பரமகயி லாச மலைமேல், பரமவெளி கிரணவொளி விசிறிமதி பெருகுநதி பதியிலகு சோதி யதிலே, சத்தமதி யத்தவளை சுற்றிவரு சித்திவழி தரல்வேண்டு மிதுச மயமே,

தற்பரா னந்த சபை நிஷ்களா னந்தசிவ சச்சிதா னந்த குருவே (கசு)

உனதுசெய லுனதறிவு உனதுணர்வு உனது பொரு ளுண்மையுயி ரான பரனே, ஊருனது பேருனது வேருனது தூருனது உய்யவே ருன திலேயே, எனதுபய மெனதுசட மெந்நாளு மென்னுசை யெள்ளளவு தள்ள முடியா, திப் படி யிருந்தடிமை யெந்தவிதம் வந்த வழி யீடேற வந்து முடியும், மனதுமதி மனதுகதி மனதொன்றி மனதன்றி மாசற்ற வாச மலரின், மாருடி நின்றபரி யீராறு கால் கொண்டுவானேற விட்ட பரனே, தனது பதி யிதுவென்று மறிவுதரு சிவசிந்தை தரல்வேண்டு மிதுசமயமே, தற்பரா னந்தசபை நிஷ்களா னந்தசிவ சச்சிதானந்த குருவே (கள)

ஒட்டிலே பட்டசிறு பக்ஷிபோ லாகியே யுழல்கின்ற பேதை மனமே, உள்ளமே கோயிலொரு வள்ளலே காணுவா யுன்னை விட் டகலா மலே, நெட்டிலே திரிகின்ற பட்டமிடு புரவியோ நீங்காத கால னவனே, நீயதிக முற்றுமலோரறிவு கிட்டாமனீயேங்கி நீம டிகிருய், எட்டிலே ரண்டிலே மட் டிலே கட்டியே யீரெழுத் தோரெ ழுத்தால், இசையாத மந்திரமு மசையா திருத்தியே யெல்லைபெற வல்ல பெரி யோர், தட்டிலே நிஷ்டைமுறை யிஷ்டமாய் நின்றபடி தரல் வேண்டு மிதுச மயமே, தற்பரா னந்தசபை நிஷ்களானந்த சிவ சச்சிதா னந்த குருவே (கஅ)

விடையேறு சடையாள ரடையாள முடிசூட வேண்டு மது தாரு மெனவே, விண்ணப்ப மொன்றுளது கண்ணப்ப னுருடைய மேலையூர் போது மெனவே, இடையூறுவாராது குடியேற வொருவீட தெப்போது தப்பாமலே, இனிய தொரு வாசமலர் மகிமைதரு நாசிமுனை யிருவழியு மொருசு

டியிலே, கடைகோடி மனையிலே யிடைவிடா ரகசியங் காட்டொணு தந்த ரங்கம், கனகசபை கொலுமேடை யனவரத கலியாணங் கண்கொளா னந்த நடனம், தடைபடா மகுடமுடி வடிவான குருபதந் தரல்வேண்டு மிதுச மயமே, தற்பரா னந்தசபை நிஷ்களா னந்தசிவ சச்சிதா னந்த குருவே. (கக)

பரமண்ட லங்கனக சபைமண்ட லம்படிக பதிமண்டலந்த வமதாய்ப், பரிவிண்ட லம்புகுத மதிகுண்ட லங்குழைகள் பணிகங்க ணங்கி ரணமே, உரமண்ட லம்பெரிய தரமண்ட லந்தெரிய வுமைபங்க னன்பு புரிய, ஒளிமண்ட லந்தரிசு வெளிமண்ட லம்பெரிசு யுகமண்ட லஞ்சி ரசதாய்ச், சிரமண்ட லங்களவை குடிகொண் டிலங்குசடை சிவசம்பு சாம்ப சிவனே, செகமண்ட லம்புகழ ரவிசம்ப்ர மங்களொடு திருவம்ப லம்ப ரவவே, சரமண்ட லங்களொடு நடனம் புரிந்தகழல் தரல்வேண்டு மிதுச மயமே,தற்பரா னந்தசபை நிஷ்களா னந்தசிவ சச்சிதா னந்த குருவே (உ0)

நந்தி நா தப்பரா விந்தபா தத்துகளை நம்பினே னிப்பொழுதுமோ, நண்பனு ருட்கருணை பொங்கியே மெய்க்கமல நன்றுபா லிக்க வருமே, இந்திரா தித்தருட னந்தமுலப்பொருளை யின்பசா காம துரமால், எந்தவே ளைக்கறிவு எந்தவேளைக்குதவி யென்று போதித்த ருளுவாய், திந்திதா திகுசந்த தாளத்தி னேடுமே செஞ்சரண நிர்த்த நடனம், செம்பொன்மே ருக்கிரியி னின்பமா முத்திதரு சிந்தைமயமற்ற குருவே, சந்திரா தித்தரிரு விந்துநா தத்தொனியில் தங்குபர தற்பிரமமே, தற்பரா னந்தசபை நிஷ்களா னந்தசிவ சச்சிதா னந்த குருவே. (உக)

வானுகி யேதமொரு காலாகி லோகமாய் வகைநாலு வேத விரிவாய், வடிவுபல ரூபமாய் நிலைசரா சரமுமாய்

வந்தவ தரித்த பொருளே, யானுகி நீயுமொரு தாயாகி வாசமல ரணுவாகி யெனைநீ யுமே, அன்றெழுதி விட்டவ னென்றறிய முற்றுமோ வபிஷேக முடிமீ திலே, தேனுகி மேருகிரி பாலான பாதமது தெரிசிக்க வெதிர்நிற் குமே, சித்தகயி லாசகொலு நாதவொயி லானதொரு சிவசிவா தீப வொளியே, தானுகி மூலமுத லாதார பாதமே தரல்வேண்டு மிதுச மயமே, தற்பரா னந்தசபை நிஷ்களா னந்தசிவ சச் சிதா னந்தகுருவே. (உஉ)

நீரூப மாகியொரு காரண கடாக்ஷமாய் நெறிமு றைமை தவரு மலே, நினைவுதரு முபதேச வறிவுசிவ குரு வாக நேசமற வாத பொருளே, மாரூப ரூபமென ரேகை வெளி யொளியிலே வாசுகிப ணும குடமேல், வரவேண்டு மிருபதம் பெறவேண்டு மடியேனு மகமேரு வடகி ரியையே, தீருப விசாலமல ரோம்நமசி வாயமே தேவார திருவா சகா, சிந்தைகுடி கொண்டருளு மெந்தனுட் சாமியே சிவஞான பரிபா லனே, சாரூப சாயுச்ய பாதார விந்தமே தரல் வேண்டு மிதுச மயமே, தற்பரா னந்தசபை நிஷ்களா னந்த சிவ சச்சிதா னந்த குருவே. (உங)

கணப்போது பிரியாத குணப்பூத வகையாற் கலைப்பாலு மலைப்பா கவே, கருவிபல கரணுதி பிறபொறிகள் புலனுசை கைமீறி மெய்மா றினுல், அணுப்பாதை நடப்பேது விருப் பான திருப்பாத மணுப்போல வரப்போ வதோ, அழுக்கான மலக்காடு செடித்தூரு விலக்காத வடிப்பாடு சிறுப்பா ன்தை காண், துணைப்போக முடியாது இளைப்பாற நிலையாது சொலக்கேளு மனக்கா மியே, துடுக்கான தலைக்காவ னெருப்பாறு மயிர்ப்பாலஞ் சுறுக்கான பெருக்கா றுகாண், க்ஷணப்போது தனைத்தேடு கருப்பூர தீபமே தரல்வேண்டு

மிதுச மயமே, தற்பரா னந்தசபை நிஷ்களா னந்தசிவ சச்சி தா னந்த குருவே. (உச)

முனையாது சுழியாது தனையேற வழியேது முடிகூடு துறையே தகாண், முதுஞானி கனியூறல் கதிரோனு மறி யாத முனைமீதி லணுவா கியே, தினையான தொருரேணு வரலாறு முனையான சிவரூப விபரீ தமே, தெரியாதி தேவ ராலு மரிதான வெளிமாயை திருமூலர் தாமு மறியார், வினையூறு மலநாறு புழுமான வினையூடி விளையாடி யலைமோ தியே, விழுகாய முதுமாய மறியாம லுறவாடி விதிமோச மதிமா யையால், தனையாய வறியாத வெனைநீயு மறவாது தரல்வேண்டு மிதுச மயமே, தற்பரா னந்தசபை நிஷ்களா னந்தசிவ சச்சிதா னந்த குருவே (உரு)

சிவகிருபை சிவமகிமை யறிவதனை யறியாத செனன மது தனைய ருது, திருநடன பரிபால நடனசபை யொயி லான திருநயன மழுமா னுமாய்,நவநினைவு பலவான மனது தனை பறமோதி நடுவணையி னடும னையிலே,நளினமல ரணை பெருகு சிறுகுமிழி துளியருளி நாயேனை யாள நினைவாய், இவனொருவ னவனென்று தனையறியத் தானில்லை யேகமுத லாகா யமே, இருமதியு மொருமதியில் வருமளவு தவரும லிசவுபக லாக மதிலே, தவமகிமை நினைவான கதியடைய விருபதந் தரல்வேண்டு மிதுச மயமே, தற்பரா னந்தசபை நிஷ்களா னந்த சிவ சச்சிதா னந்த குருவே. (உசா)

அயனொருவ னரியொருவ னரனொருவ னுகவிம் மூவரையு மன்பா கவே, அருளுமொரு குருசாமி யிவிட மல வெகுதூர மதுவறிய வெகுவ ருஷமாய், வியனுலகு தெரியாத ரகசியமி தாரறிவர் விரிகமல சுருதி முடிவு,

விளைவுபயிர் முனைபுகுத விடமுமொரு துகளளவு மிடை விடா தேக வெளியில், பயனுதவு தயைதான பதியருளு மினிதான பரமகுரு நாத சிவனே, பதியணுகு பசுபாச வினையகல விடல்வேண்டும் படிகமய தவள வடிவே, சயனமொரு மலரணையி லொலிநடன மணியோசை தரல் வேண்டு மிதுச மயமே, தற்பரா னந்தசபை நிஷ்களா னந்தசிவ சச்சிதா னந்த குருவே (உஎ)

பகலிரவு மதியிரவி வருதிசைக ளுலகுவெளி பரம வணு பனியளவுமாய்ப், பகருமொரு விவரமிஃ தெவரு மறி யாதசெயல் பவுரிகயி லாச மெனவே, உகமுடிவு தினை யளவு தலையறிய முனைபெரிய துறுதிவழி யறுதி நிலைபார், உதயமிரு பதசரண கிரணமணி கலகலென வுரகபட நடு மு டிவிலே, அகமகிழ வருபரம குருநமசி வாயமே யத்து வித முத்தி புரிவாய், அழகுதிரு மணிமகுட முடிசடையு மறிமழுவு மடலரவு மபய முடனே, சகலகலை யமிர்தகுண விகிர்தநட ரிஷபவிடை தரல்வேண்டு மிதுச மயமே, தற் பரா னந்தசபை நிஷ்களா னந்தசிவ சச்சிதா னந்த குருவே (உஅ)

நாலுமறை யறியாத யோகபர வெளியிலே ராகமனு ராக தொனியாய், நாசிநுனி நடுவாகி வாசியிடை கடை யாகி நாதகயி லாச வெளியில், காலுதலை யதுவாகி யேறு துறை முறைகூறு காசிநக ரூசி துருவம், கதலிவன மிடு காடு படுகுழிகள் சிறுபாதை கடுவெளியி லரவு நெளிவு, போலுமது விருளான மூடுதிரை யறவீசு போகுவது காம வெகுளி, பூதபொறி புலனுசை யேதுமிலை நிலையாது புருவநடு மதிய டையவே, சாலுமிது பாலுநெய் போலு மது தெளியவே தரல்வேண்டு மிதுச மயமே, தற்பரா னந்தசபை நிஷ்களா னந்தசிவ சச்சிதானந்த குருவே (உகூ)

பரமுமிது பொருளுமிது வழியுமிது தெளிவுமிது பதினுலுலோக மிதுவே, பாசவினை யாலெனது மோகமே மோசமிது பாழுறவு பாழா னதே, உரமுமிரு காலோசை யிரவுபக லன்றியே யுட்சரா சரமு மதிலே, ஒளிவெளியி லொளியாகி யுபநிடத நடனமா யூழிவழி யாழி யெனவே, சிரமகுட முடிவிலே கனகமணி யிசையிலே சிவஞான தீப மதுபார், திருமருவு சிவசோதி மதிபெருகு கதிவீடு தெரிசனக ளாகி முடியும், சரமுமது பதிசேவை சகலகலை யனுராக சாயுச்ய பதம ருளுவாய், தற்பரா னந்தசபை நிஷ்களா னந்தசிவ சச்சிதா னந்த குருவே (௩௰)

சச்சிதா னந்த மென்னுந் தன்மையை மகிழ்ந்து கேட்போர், உச்சிமேற் பார்வையாகி யுள்வெளி திறந்து முப்பாழ், வச்சிர வொளியுந் தாண்டி மகிழந்தொரு வாசல் கண்டு, நிச்சய நிஷ்க ளத்தே நிராமயச் சோதி சேர்வார்.

சச்சிதானந்த மாலை முற்றிற்று.

1806

கிடைக்குமிடம்:—

எ. ஜெனமல்லுக் கவுண்டர்,

முள்ளூர்,

சக்கம்மாள்புரம் போஷ்டு,

விளாத்திகுளம் மார்க்கம்.